# நிறுவனம்சார் விபரத்தை செயல்படுத்தல் பொழிப்பு

## 1.1. அறிமுகம்

தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறைகளில் உள்ள ஊழியர்களின் தொழில்முறை உரிமைகளைப் பாதுகாத்தல், சமூகப் பாதுகாப்பு, தொழிற்றுறை அமைதியை உறுதி செய்தல், பயிற்சி பெற்ற தொழிலாளர்களை தொழிற் சந்தைக்கு வழிநடத்துதல், தொழில் வாய்ப்பை உறுதி செய்தல், தொழிற் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் நாட்டில் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு உள்நாட்டு பணியாளர்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை வகுத்து செயல்படுத்துவதே தொழில் அமைச்சின் பிரதான பணியாகும்.

இந்தப் பணியை நிறைவேற்றுவதில், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் இலங்கையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சமவாயங்கள் அடிப்படையில் தாபித்த 2022.07.22 திகதியிட்ட 2289/43 ஆம் இலக்கம் மற்றும் 2024.11.25 திகதியிட்ட 2412/08 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்புகளின் அடிப்படையில் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள் மற்றும் தேசிய கொள்கை அடிப்படையில் தாபிக்கப்பட்ட தொழிலாளர் விடயதானம் மற்றும் அமைச்சுடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களின் விடயதானம் தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும கருத்திட்டங்களை திட்டமிடுதல், செயற்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கையில் ஈடுபடல் இந்த அமைச்சின் பிரதான செயற்பாடு ஆகும்.

## 1.2. நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

**நோக்கு**

திருப்திமிகு உற்பத்தித்திறன் கொண்ட இலங்கைத் தொழில்ணி

**செயற்பணி**

தொழிற்றுறை அமைதி மற்றும் ஒத்துழைப்பு, சமூகப் பாதுகாப்பு, வேலையாட்கள் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மூலம் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்.

**குறிக்கோள்கள்**

· முத்தரப்பு வலுவூட்டல் மூலம் தொழில்தருநர்- பணியாளர் உறவுகளை வலுப்படுத்துதல்.

· சர்வதேச நியமத்துக்கேற்ப தொழில் நிலைமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகளை உறுதி செய்தல்.

· சிறுவர் தொழில் முறையை ஒழித்தல்

· தொழிற்புரியும் பெண்களுக்கு வலுவூட்டல், தொழில் பாதுகாப்பை வலுப்படுத்துதல் மற்றும் தொழில்முறை சட்டங்கள் மற்றும் உரிமைகளை உறுதி செய்தல்.

· தொழில் சட்டவாக்கங்கள் மற்றும் நடைமுறைகளின் நெகிழ்வுப் போக்கினை அதிகரித்தல்.

· உழைக்கும் மக்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பொருத்தமான மூலோபாயங்களை வகுத்தல்.

## 1.3. அமைச்சின் பிரதான செயற்பாடுகள்

· அரசாங்கத்தின் தேசியக் கொள்கையின் அடிப்படையில் தொழிலாளர் பிரச்சினைகளில் கொள்கைகளை வகுத்தல், திட்டமிடுதல், செயற்படுத்தல்;, கண்காணித்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல்;.

· அமைச்சின் எல்லைக்குள் அரச சேவைகளை வினைத்திறனான மற்றும் பொதுமக்கள் நட்பு முறையில் வழங்குதல்.

· வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்து, அமைச்சின் செயற்பாடுகளை

நிறைவேற்றுவதை உறுதிசெய்ய உதவும் வகையில், நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைமைகள் மற்றும் நடைமுறைகளை மறுசீரமைத்தல்;.

· தொழில் நியாயசபை நிர்வாகம் தொடர்பான பிற விடயங்களைக் கையாள்தல்

· சர்வதேச நியமத்துக்கு இணங்க தொழிலாளர் உறவுகள், தரநிலைகள், பணியாளர் நிர்வாகம், நலன்புரி மற்றும் சுகாதாரம் தொடர்பான கொள்கைகளை வகுத்து செயற்படுத்தல்;.

· சர்வதேச தொழிலாளர் தாபனம் மற்றும் சர்வதேச சமூக பாதுகாப்பு அமைப்புடன் ஒத்துழைப்பைப் பேணுதல்;.

· ஊழியர் சேமலாப நிதி, தனியார் சேமலாப வைப்பு நிதி மற்றும் தனியார் ஓய்வூதியத் திட்டங்களின் நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு.

· தொழிற்றுறை உறவுகள் மற்றும் தொழிற்றுறை பிணக்குகளை தீர்த்தல்

· தொழிலாளர் உறவுகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் தொடர்பான செயற்பாடுகள்

· தொழிற்சங்கங்களைப் பதிவு செய்வதற்கும், அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளையும் நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதற்கும் தேவையான நேர்முறையான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் செயற்படுத்தல்;.

· தேசிய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு கொள்கைகளை செயற்படுத்தல்;.

· தனியார் துறையில் அனைத்து மட்டங்களிலும் உள்ள ஊழியர்களை உள்ளடக்கிய ஒரு சமூக பாதுகாப்பு நிதியத்தை உருவாக்குதல்.

· அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கும் வகையில் ஒரு சமூகப் பாதுகாப்பு நிதியத்தை உருவாக்குதல்.

· நிர்வாக மற்றும் முகாமைத்துவ பதவிகளில் பெண்களின் பயனுள்ள வேலைவாய்ப்புக்கான தடைகளை நீக்குதல்.

கட்டுமானத் துறையில் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு நீண்டகால காப்பீட்டுத் திட்டம் மற்றும் ஓய்வூதிய அனுகூல பலன்களை வழங்குவதற்கான ஒரு அமைப்பை அறிமுகப்படுத்துதல்.

## 1.4. அமைச்சின் கீழ் வருகின்ற பிரிவுகள்

### 1.4.1. நிர்வாக மற்றும் தாபன பிரிவு

அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களின் நிர்வாகம், முகாமைத்துவ, பொது பராமரிப்பு, பயிற்சி மற்றும் ஒருங்கிணைப்பு, மனிதவள முகாமைத்துவ மற்றும் தொடர்புடைய கடமைகள் இந்தப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.
அதன்படி,

· அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து அரசு உத்தியோகத்தர்கள் மற்றும் கௌரவ அமைச்சர்களின் உதவி பணிக்குழாம் தொடர்பான தனிப்பட்ட கோப்புகளைப் பேணுதல், மற்றும் பிற தொடர்புடைய நிறுவன விவகாரங்கள் மற்றும் பணியாளர் தகவல்களைப் இற்றைப்படுத்திய நிலையில் வைத்திருத்தல்.

· அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டிய தாபன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்.

· அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயாரித்தல் மற்றும் அமைச்சரவை முடிவுகளின்படி செயற்படுதல்.

· ஏற்கனவே உள்ள சட்டங்களைப் இற்றைப்படுத்தல் மற்றும் புதிய சட்டங்களை இயற்றுவதன் மூலம் தொழிற்றுறை ஒத்துழைப்பு, தொழில் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கான கொள்கை உள்ளீட்டை வழங்குதல்.

· ஆலோசனைக் குழுவினால், அரச முறையீட்டு ஆணைக்குழுவினால் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளித்தல், அத்துடன் பாராளுமன்ற கேள்விகளுக்கு பதிலளித்தல்.

· சனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் மூலம் அனுப்பப்படும்

பொதுமக்கள் முறைப்பாடுகள் போன்று நேரடியாகப் பெறப்படும் பொதுமக்கள் பிரச்சினைகளையும் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அனுப்புதல்.

· அமைச்சின் வாகன நிர்வாகம், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், பயிற்சி நடவடிக்கைகள், மூலதன பொருட்கள் மற்றும் உபகரணங்களை முகாமைத்துவம் செய்தல் மேலதிக நேர, விடுமுறை கொடுப்பனவு, அக்ரஹார காப்பீடு மற்றும் இடர் கடன் அனுமதி முதலிய செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

### 1.4.2. அபிவிருத்தி பிரிவு

சர்வதேச தொழிலாளர் தாபனத்துடன் அந்த அமைப்பின் உறுப்பு நாடுகளில் ஒன்றாக இலங்கையினால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பிணைப்பு, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சமவாயங்கள் மற்றும் பரிந்துரைகளின் கீழ் இந்நாட்டில் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் தொழில் துறையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க பயன்படுத்திக் கொள்வதன் மூலம் தொழில் அமைச்சின் சார்பாக முன்னெடுக்க இந்தப் பிரிவு மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

· இலங்கையால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் தொழிலாளர் சமவாயங்கள் இலங்கையில் செயற்படுத்தல் தொடர்பான முன்னேற்றத்தை சர்வதேச தொழிலாளர் தாபனத்துக்கு குறிப்பிட்ட கால வரையறைக்குள் சமர்ப்பித்தல்.

· தொழில் துறையில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து சர்வதேச சமூகத்திற்குத் தெரிவித்தல்

· தொழில் துறையுடன் தொடர்புடைய தற்போதைய பிரச்சினைகளைத் தீர்க்க சர்வதேச தொழிலாளர் தாபனத்திலிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை பெற நடவடிக்கை எடுத்தல்

· அமைச்சு மற்றும் அதன் கீழ்வரும் நிறுவனங்களின் உத்தியோகத்தவர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுத்தல்.

· காலத்திற்கு ஏற்றவாறு புதிய சட்டங்களை உருவாக்குவதற்கும் தற்போதுள்ள தொழில் சட்டங்களைத் திருத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், செயற்படுத்தல், மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல்.

· புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/உடன்படிக்கைகளை எட்டுதல், ஒப்பந்தங்களைப் இற்றைப்படுத்தல், ஒப்பந்தத்தில் கூறப்பட்ட கடமைக்கூறுகளை செயற்படுத்துவது குறித்த பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் / கூட்டுக் குழு கூட்டங்களுக்குரிய நடவடிக்கைகள் மற்றும் பிராந்திய/உலகளாவிய கலந்துரையாடல்கள் மற்றும் தொடர்பான செயற்பாடுகள்.

· நடமாடும் சேவை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்

### 1.4.3. திட்டமிடல் மற்றும் மேற்பார்வை பிரிவு

அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள அனைத்து இணைக்கப்பட்ட நிறுவனங்களின் அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களை சரியான இலக்குகளின் பிரகாரம் செயற்படுத்த தேவையான திட்டங்களைத் தயாரிப்பது, அவற்றைச் செயல்படுத்துவது, முன்னேற்றத்தை மீளாய்வு செய்வது மற்றும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்வது பிரதான பணியாகும் என்பதோடு பின்வரும் பணிகளும் செய்யப்படுகின்றன.

· அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்கள் அடைய வேண்டிய அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்கிய வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்து, அதை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்பி, செயற்படுத்தி, ஒவ்வொரு மாதமும் முன்னேற்றத்தை மதிப்பிடுவதன் மூலம் இலக்குகளை அடைவதை கண்காணித்து ஊக்குவித்தல்

· தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து மாதாந்த மற்றும் காலாண்டுக்கு ஒருமுறை முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

· வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான திட்ட முன்மொழிவுகளைக் கண்டறிந்து சமர்ப்பித்தல்.

· அமைச்சினால் அடையப்பட்ட முன்னேற்றம் உட்பட, வரவு செலவுத் திட்ட குழு விவாதத்திற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

· நோக்கத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் பொருத்தமானதாக இருந்தால் அவற்றை தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு பரிந்துரைத்தல்.

· பிற அமைச்சுகளால் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்களுக்கு பொருத்தமான பங்களிப்புகளை வழங்குதல்.

### 1.4.4. நிதிப் பிரிவு

வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகள், அரசாங்கக் கொள்கைகளுக்கு இணங்க தொடர்புடைய நோக்கங்களை அடைவதற்கு வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதே நிதிப் பிரிவின் பிரதான பொறுப்பாகும்.
· தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்புகளை நடத்துதல்.· நிதி அதிகார முகவர்கள் தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் நிதி அதிகாரத்தை பகிர நடவடிக்கைகளை மேற்கொள்ளல்· வருடாந்த வரவு செலவு திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்· ஆண்டுக்கான நிதிக்கூற்று அறிக்கையைத் தயாரித்தல்· அரசாங்கக் கணக்குகள் குறித்த குழு அறிக்கையைத் தயாரித்தல், மாதாந்த மற்றும் காலாண்டு நிதி அறிக்கைகளை திறைசேரி மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.

· கணக்காய்வு விசாரணை வினவல் ஆவணங்களைப் இற்றைப்படுத்தல்; மற்றும் பேணுதல்; மற்றும் தொடர்புடைய கணக்காய்வு விசாரணை வினவல்களுக்கான பதில்களை கணக்காய்வு ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்புதல்.

### 1.4.5. உள்ளக கணக்காய்வு பிரிவு

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38 (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பிரதம கணக்கு அதிகாரியின் பொறுப்புகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்காக, மேற்படி சட்டத்தின் பிரிவு 40 இன் பிரகாரம் நியமனம் செய்தல், அவரது பொறுப்புகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்காக, நி. பி 133 மற்றும் 134 இன் கீழ உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 01/2019 மற்றும் 2019/01/12 திகதிய சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய திருத்தங்களின் கீழ் அமைச்சின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்படுகின்றன.
தொழில் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை நடத்துவதற்கான பொறுப்பு மற்றும் தேவைக்கு ஏற்ப, தேவைக்கேற்ப விசேட சோதனை ஆய்வுகளை மேற்கொள்வது உள்ளக கணக்காய்ப் பிரிவின் விடயதானமாகும்.

· நிறுவனங்களுக்குள் செயற்படுத்தப்படும் உள்ளக கணக்காய்வு மற்றும் கட்டுப்பாட்டு முறையின் செயற்பாட்டின் வெற்றியை தேடிப்பார்த்தல்.

·தாபன விதிக்கோவை, நிதி பிரமாணங்கள் மற்றும் பொது நிர்வாகத்திற்குப் பொறுப்பான அமைச்சினாலும் பொதுத் திறைசேரியினாலும் அவ்வப்போது வெளியிடப்படும் மற்றும் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் பிற குறைநிரப்பான அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுகிறதா என்பதை உறுதி செய்தல்.

• தொழில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் நோக்கம் மற்றும் குறிக்கோள்கள் மற்றும் கணக்காய்வுக் கொள்கைகள் அமைப்பின்படி உளளக கணக்காய்வு நடவடிக்கைகளை விளைதிறனாக முகாமைத்துவம் செய்தல்.

· அமைச்சின் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கொள்கைகள், திட்டங்கள், நடைமுறைகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக நிறுவப்பட்ட கட்டுப்பாட்டு அமைப்புகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தல்.

· சொத்துக்களைப் பாதுகாக்கவும் சொத்துக்களின் இருப்பை உறுதி

செய்யவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மதிப்பீடு செய்து மெய்யுறுதி செய்தல்.

· பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் அமைச்சானது தாபிக்கப்பட்ட நோக்கங்களுக்கு ஏற்ப அடையப்பட்டுள்ளதா என்பதை தேடிப்பார்க்க நடவடிக்கைகள் அல்லது நிகழ்ச்சித் திட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் தகவல்களை ஆய்வு செய்தல்.

· நிறுவனத்தின் ஒவ்வொரு துறைக்கும் பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு செயல்முறைகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ செயல்முறைகளை நிறுவுவதற்கான வழிகாட்டுதலை வழங்குதல்.

· கணக்காய்வு செயல்முறைக்குப் பிறகு தொடர்பாடுதல் மற்றும் தேவையான திருத்தம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு பின்னர் சமர்ப்பித்தல்.

· வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல்.

· முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்துக்கு அறிக்கைகளை உரிய திகதியில் சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

· கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தைக் கூட்டி நடத்துதல்.

· நிர்வாகத்தால் அவ்வப்போது சந்தர்ப்பத்துக்கேற்ப ஒப்படைக்கப்படும் குறிப்பிட்ட கடமைகளைச் செய்து அறிக்கை இடல்.

## 1.5 நிறுவன அமைப்பு



## 1.6 அமைச்சுடன் இணைக்கப்பட்ட நிறுவனங்கள்

### 1.6.1. தொழில் திணைக்களம்

தொழில் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு பிரதான நிறுவனமான தொழில் திணைக்களத்தின் பிரதான பணியானது இலங்கையில் தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறை ஊழியர்களுக்கு தொழில் சட்டங்களால் வழங்கப்படும் உரிமைகளை உறுதி செய்வதாகும். அதுபோல தொழில் திணைக்களம் தற்போது வேலை வழங்குநர்-பணியாளர் உறவுகளை விருத்தி செய்வது மற்றும் வேலை வழங்குநர்களின் உதவியுடன் பணியாளர் உரிமைகளை வலுப்படுத்துவதன் மூலம் தொழிற்றுறை அமைதியை மேம்படுத்துவதற்கு சமகாலத்தில் முனைப்பாக செயற்பட்டு வருகிறது.
மேலும், முதலீட்டை ஊக்குவிப்பதற்கு மிகவும் உகந்த சூழலை உருவாக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க, பல தசாப்தங்களாக பழமையான மற்றும் சிக்கலான தொழில் சட்டங்களுக்கு பதிலாக வசதியான வேலை வழங்குநர்-பணியாளர் உறவை மேம்படுத்துவதற்கு பங்களிக்கும் புதிய தொழில் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான அடிப்படை செயற்பாடுகளுக்கு தொழில் திணைக்களம் தேவையான ஒத்துழைப்பை வழங்குகிறது.

தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் 14 பிரதான பிரிவுகளின் கீழ் செயற்படுவதோடு, 11 பிராந்திய பிரதி தொழில் ஆணையாளர் அலுவலகங்கள், 40 மாவட்ட தொழில் அலுவலகங்கள், 17 உப தொழில் அலுவலகங்கள் மற்றும் 10 மாவட்ட தொழில் அலுவலகங்கள் மூலம் மாவட்ட மற்றும் பிராந்திய மட்டங்களில் அதன் சேவைகளைச் செய்கிறது.

**பிரதான செயற்பாடுகள்**

· சமூக கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதன் மூலம் நிறுவன மட்டத்தில் வேலை வழங்குநர்-பணியாளர் உறவுகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
· தொழில் சட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

· நேர்த்தியாக்கல், கூட்டு ஒப்பந்தங்கள் மற்றும் மத்தியஸ்த நடுத்தீர்ப்பு மூலம் தொழிற்றுறை பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்.

· ஊழியர் சேமலாப நிதியம் மூலம் ஊழியர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

· ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார தொடர்பான விவகாரங்களை கையாள்தல்

· சிறுவர் தொழில் முறையை ஒழித்தல் மற்றும் தொழில் புரியும் பெண்களைப் பாதுகாத்தல் தொடர்பில் செயற்படுதல்.

· ஊதியங்கள் மற்றும் சேவைகொள்ளல் நிபந்தனைகள் வலுப்படுத்துவதன் மூலம் தொழில் தராதரங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்

### 1.6.2. மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

உலகளாவிய மற்றும் உள்நாட்டு தொழில் சந்தை போக்குகளை அடையாளம் கண்டு, இலங்கையின் மனித வளங்களை தொழில் சந்தையுடன் பொருத்துதலை நோக்கமாகக் கொண்டு மனித வள அபிவிருத்தி, பணியாளர்களின் தரத்தை மேம்படுத்துதல், தொழில் வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு இளைய சமூகத்தின் பங்களிப்பைப் பெறுதல் போன்ற நோக்கங்களை அடைதலுக்காக மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு பாதுகாப்புத் திணைக்களம் 2010.01.01 முதல் செயற்பட்டு வருகிறது.

**பிரதான செயற்பாடுகள்**

· தேசிய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையை வகுத்து செயற்படுத்தல்
· தொழில் உருவாக்கம் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள்
· தொழில் வழிகாட்டுதலுக்குரிய நடவடிக்கைகள்
· தொழில் சந்தை தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பகிர்தல்
· பொது வேலைவாய்ப்பு சேவை தொடர்பான அனைத்து சேவைகளும்

இங்கு முதல் பணியாகக் கூறப்படும் தேசிய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையை உருவாக்கி செயல்படுத்தும் பொறுப்பு, தற்போது தேசிய மனிதவள அபிவிருத்தி சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், ஒரு கூட்டுப்பணி நிறுவனமாக, மேற்கண்ட நோக்கங்களை அடைவதற்கு பங்களித்தல்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றது.

### 1.6.3. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம் செப்டம்பர் 11, 2007 அன்று நிறுவப்பட்டதோடு 2010 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கம்; தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்தின் மூலம் நடைமுறைக்கு வந்தது. இந்த நிறுவனம் தொழிற் துறையில் முத்தரப்பு கூட்டாளர்களான வேலை வழங்குநர்கள், ஊழியர்கள் மற்றும் அரசு ஊழியர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையால் நிர்வகிக்கப்படுகிறது.

**பிரதான செயற்பாடுகள்**

· உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து தொழில் கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல், ஊழியர்கள் விருத்தி, செயல்பாட்டில் முனைப்பான பங்கேற்பாளர்களாக மாறுவதற்கு அவர்களின் சேமநலனை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

· தொழில் கற்கைகள் குறித்த கருத்தரங்குகள், செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடத்துதல் மற்றும் இதழ்கள், சஞ்சிகைகள், பருவ வெளியீடுகள் மற்றும் புத்தகங்களை வெளியிடுதல்.

· ஆராய்ச்சி மேற்கொள்ளல், கணக்கெடுப்புகள் நடத்தல் மற்றும் தொழில் கற்கைகள் தொடர்பான கற்கைநெறிகளுக்கு ஏற்பாடுகளை செய்ய நூலகங்கள் மற்றும் தகவல் வழங்கும் சேவைகளை நிறுவுதல் மற்றும் பேணுதல்.

· ஒத்த நோக்கங்களைக் கொண்ட தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்புகள், கழகங்கள் மற்றும் சங்கங்களுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் பணியாற்றுதல்.

· பல்கலைக்கழகங்கள் மற்றும் ஒத்த நிறுவனங்களின் ஆதரவுடன் தொழில் கற்கைகளில் டிப்ளோமா கற்கைநெறிகள் உள்ளிட்ட கற்கைநெறிகளை நடத்துதல் மற்றும் தேவையான இடங்களில் சான்றிதழ்கள் மற்றும் டிப்ளோமாக்களை வழங்குதல்.

· தொழிற்றுறை அமைதியைப் பேணுவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

### 1.6.4. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

இலங்கையில் சிறந்த தொழில்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் நல்ல சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன், 2009 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனச் சட்டத்தின் மூலம் இந்த அமைச்சின் இணைக்கப்பட்ட நிறுவனமாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் தாபிக்கப்பட்டது.
தினசரி மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் அளவீட்டு ஆய்வுகள், இடர்நேர்வு மதிப்பீடுகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் போன்றவை மூலம் விசேட நிகழ்ச்சித் திட்டமாக செயற்படுத்தப்படும் பயிற்சியளித்தல், செயற்றிட்டங்கள் மூலம் மற்றும் பிற நாடுகளுடன் சர்வதேச ஒத்துழைப்பு அடிப்படையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் ஊடாக இலங்கையில் உற்பத்தித் திறன் கொண்ட பணியாளர்களை உருவாக்குவதற்கு இந்த நிறுவனத்தால் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

**பிரதான செயற்பாடுகள்**

· வேலை வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் தொழிலின் தன்மையைக் கருத்தில் கொண்டு, வேலை வழங்குநர்கள் மற்றும் பணியாளர்கள் இருதரப்பினரின் பணிச்சூழல் தொடர்பில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த தேசிய கொள்கையை வகுப்பதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

· வேலைத்தள ங்களில் தொழில் தொடர்பாக நிகழும் விபத்துக்கள் மற்றும் காயங்களைத் தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

· தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் புலனாய்வு கற்கை நிகழ்ச்சித் திட்டங்கள் கணக்கெடுப்பு மற்றும் ஆராய்ச்சிகளை நடத்துதல் மற்றும் அவற்றுக்கு உதவுதல்.

· உபகரணங்கள், அபாயகரமான பொருட்கள், பௌதிக, இரசாயன அல்லது உயிரியல் காரணிகள் அல்லது

தயாரிப்புகள் அல்லது வேறு ஏதேனும் அபாயகரமான பொருட்களின் சரியான பயன்பாடு குறித்து எந்தவொரு நிறுவனம் அல்லது நபருக்கும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

· வேறு எந்த நிறுவனம் அல்லது இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள பல்கலைக்கழகத்துடன் இணைந்து அல்லது நிறுவகம் மூலம் தொழில் தருநர், குடியிருப்பாளர்கள், தொழிலாளர்கள் அல்லது வேறு எந்த தரப்பினருக்கும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மற்றும் தொடர்புடைய விடயங்கள் குறித்த அறிவூட்டல் மற்றும் பயிற்சியை வழங்குதல் மற்றும் அதற்கான சான்றிதழ்கள் அல்லது டிப்ளோமாக்களை வழங்குதல்.

· உபகரணங்கள், அபாயகரமான பொருட்கள், பௌதிக, இரசாயன உயிரியல் பொருட்கள் அல்லது தயாரிப்புகளின் சரியான பயன்பாடு தொடர்பாக, உள சமூக ரீதியான ஆபத்துகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட ஆபத்துகளைத் தடுப்பதற்கும் தேவையான சேவைகளை வழங்குதல்.

· தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான விடயங்களில் தரநிர்ணயம், குறியீடுகள், நடைமுறைகள் மற்றும் முன்னோடி ஆய்வுகள் தொடர்பான சட்டத் தேவைகள் குறித்து அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

- வேலை நடைமுறைகள் சரியாக இடம்பெறுகின்றதா என மேற்பார்வையிடல் மற்றும் ஒழுங்காக மேற்கொள்ளப்படுகிறதா என்பதைக மதிப்பீடு செய்தல்.

· தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தகவல்களை சேகரித்தல், தயாரித்தல், பகிர்தல் மற்றும் வெளியிடுவதில் ஒத்துழைப்பாக செயற்படல்.

· தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் பிற நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் நிதியுதவி செய்தல்.

· தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த அமைச்சுகளுக்கு இடையேயான நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

· தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் பயிற்சியை ஊக்குவிக்கவும் மேம்படுத்தவும் நூலகங்கள் மற்றும் ஆய்வகங்களை நிறுவி பேணுதல்.

· ஆராய்ச்சி மற்றும் விசேட ஆய்வகங்களின் அபிவிருத்தி.

· தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையுடன் தொடர்புடைய தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் உறவுகளைப் பேணுதல்.

· தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறைகளில் தேசிய தரநிர்ணயங்களை தாபித்தல்.

### 1.6.5. தொழிலாளர் நட்ட ஈட்டு ஆணையாளர் அலுவலகம்

வேலைவாய்ப்பு செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்படும் விபத்துகள் தொடர்பில் நட்டஈடு வழங்குவதற்காக,1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கம் தாங்கிய தொழிலாளர் கட்டளைச் சட்டம் மற்றும் அவ்வப்போதான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் உள்ளிட்ட விடயங்களை செயல்படுத்துவது தொழிலாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தின் பிரதான பணியாகும். தொழிலாளர் நட்ட ஈட்டு நீதிமன்றம், மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான்களின் தத்துவங்களோடு முழு நாட்டையும் தழுவியதாக 14 சுற்றுலா நீதிமன்றங்களைக் கொண்டுள்ளதோடு நீதித்துறை சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட நீதித்துறை அதிகாரியான தொழிலாளர் நட்ட ஈட்டு ஆணையாளர், மேலதிக தொழிலாளர் நட்ட ஈட்டு ஆணையாளர் மற்றும் பிரதி தொழிலாளர் நட்ட ஈட்டு பிரதி ஆணையாளர் எனும் பதவிகள், இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I பதவி மற்றும் இலங்கை நிர்வாக சேவையின் I பதவி உள்ளிட்ட 43 அதிகாரிகள் தரப்பினரை கொண்டுள்ளது. பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது விபத்துகளில் காயமடைந்த ஊழியர்களுக்கு நட்டஈடு அறவிடுவது, தொழிலின் தன்மை காரணமாக ஏற்படும் நோய்களால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நட்டஈடு அறவிடுவது மற்றும் வேலையில் இருக்கும்போது விபத்துகளில் இறக்கும் ஊழியர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு நட்டஈடு அறவிடுவது தொழிலாளர் நட்ட ஈட்டு ஆணைக்குழு அலுவலகத்தின் பிரதான நோக்கங்களாகும்.

தொழிலாளர் நட்ட ஈட்டு நீதிமன்ற செயல்முறையானது குற்றவியல் நடைமுறைச் சட்டம், சிவில் நடைமுறைச் சட்டம் மற்றும் சாட்சியக் கட்டளைச் சட்டம் ஆகியவற்றை பொருத்திக்கொள்வதால் மேல்முறையீட்டு நடைமுறை மாவட்ட நீதிமன்றத்துக்கு சமனானது.

**பிரதான செயற்பாடுகள்**

· அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் பணியில் இருக்கும்போது ஏற்படும் விபத்துக்கள், தொழில்சார் நோய்கள் மற்றும் இறப்பு ஏற்பட்டால் அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு நட்டஈடு அறவிடும் செயற்பாடு.

· இள வயதுடையோர் அவர்கள் உரிய வயது வரும் வரை தொழிலாளர் நட்ட ஈட்டு ஆணையாளரின் பொறுப்பின் கீழ், தேசிய சேமிப்பு வங்கியில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிர்வகித்தல் செயற்பாடு.

· ஊழியர்களுக்கு விபத்து ஏற்பட்டால், வேலை வழங்குநர்கள் நட்டஈடு வழங்கத் தவறும் சந்தர்ப்பங்களில், அவர்களின் அசையா மற்றும் அசையும் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, பகிரங்க ஏலத்தில் விற்று நட்ட ஈட்டு தொகையை அறவிடுதல்.

· தொழிலாளர் நட்ட ஈட்டு காப்பீட்டு உரிமங்களை வழங்குதல், இற்றைப்படுத்தல், மற்றும் ரத்து செய்தல்.

· ஊழியர் விபத்துக்குள்ளானால் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சோதனை செய்தல்.

· இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கப்பல்கள் மற்றும் விமானங்களின் ஊழியர் களுக்கான இலங்கைக்கு வெளியே நிகழும் விபத்துகளுக்கான நட்ட ஈட்டை அறவிடல்.

## 1.6.6. சிரம வாசனா நிதியம்

1998 இன் 12 ஆம் இலக்க (2019 இன் 15 ஆம் இலக்க திருத்தம்) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட சிரம வாசனா நிதியம், தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் தொழிலாளர்களின் நலனுக்காக தொடக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். சிரம வாசனா நிதியச் சட்டத்தின் 06 நோக்கங்கள் மூலம், அதன் தொடக்கத்திலிருந்து இன்றுவரை பல்வேறு நலத்திட்டங்கள் நடத்தப்பட்டு இலங்கை ஊழியர்களின் மேம்பாட்டிற்காக நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
தேசிய அதிஸ்டலாபச் சீட்டு சபையால் விற்கப்படும் லக்கி செவன் லொட்டரியிலிருந்து கிடைக்கும் வருமானமே சிரம வாசனா நிதியத்தின் பிரதான வருமான வகையாகும்.

**பிரதான செயற்பாடுகள்**

· ஊழியர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் நலனை மேம்படுத்துதல்
· ஊழியர்கள் பணிபுரிந்த நிறுவனங்கள் முன்னறிவிப்பின்றி மூடப்பட்டால், அவர்களுக்கு நிதி மற்றும் பிற உதவிகளை வழங்குதல்.

· அவசர காலங்களில் ஊழியர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு மருத்துவ மற்றும் பிற வசதிகளை வழங்குதல்.

· ஊழியர்களுக்கு எதிராக விசாரணைகள் தொடங்கப்படும்போது அவர்களுக்கு தற்காலிக உதவி வழங்குதல்.

· அனர்த்த காலங்களில் ஊழியர்கள் அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கு நிதி மற்றும் பிற வசதிகளை வழங்குதல்.

· ஊழியர்களின் நலனுக்காக சிறந்த சேவையை வழங்கியவர்களுக்கு பரிசுகளை வழங்குதல்.

· தொழில் ஆணையாளர் நாயகம், தொழில் நியாயசபை, நடுத்தீர்ப்பாளர் அல்லது தொழில் நீதிமன்றம் அல்லது எந்தவொரு நீதிமன்றத்தில் எந்தவொரு எழுதப்பட்ட சட்டத்தின் விதிகளின் கீழ் ஒதுக்கப்பட்ட அல்லது நிலுவையில் உள்ள யாதுமொரு ஊழியரின் தொழிலை முடிவுறுத்தல் தொடர்பான அல்லது ஒரு தொழிற்றுறை பிணக்கு தொடர்பாக வழக்கு நடவடிக்கைக்கு ஊழியர்களுக்கு சட்ட உதவி பெற நிதி நிவாரணம் வழங்குதல்.

# முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

இந்நாட்டின் 8.40 மில்லியன் தொழில் அணியிலுள்ளோரில், 8.01 மில்லியன் பேர் தொழில் புரிவதோடு, இதில் அரச ஊழியர்கள், சொந்தத் தொழில்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் குடும்பத் தொழில்களுக்கு பங்களிப்பவர்கள் தவிர 3.75 மில்லியன் பேர் தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறைகளில் பணிபுரிகின்றனர். அந்த ஊழியர்களின் தொழில் உரிமைகள், தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான வழிமுறைகளை செயற்படுத்துவதன் மூலம் நாட்டில் தொழிற்றுறை அமைதியைப் பேணுவதற்கும், அதனூடாக நாட்டின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பது இந்த அமைச்சு பொறுப்பாகும். இதற்காக இந்த அமைச்சு பல நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் தங்கள் நோக்கங்களை அடைவதற்காக மேற்கொண்ட திட்டங்கள் தொடர்பாக, டிசம்பர் 31, 2024 திகதிய திகதியன்று அடைந்த முன்னேற்றத்தின் பொழிப்பை இந்த அத்தியாயம் உள்ளடக்கியுள்ளது.

## 2.1. தொழில் அமைச்சு

### 2.1.1 சட்ட விடயங்கள்

#### 2.1.1.1 ஊழியர்களின் தொழில்முறை உரிமைகளைப் பாதுகாக்க சட்ட கட்டமைப்பை வலுப்படுத்துதல்

இலங்கையில் முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கும் நாட்டின் எதிர்காலத்தில் அபிவிருத்தியை அடைவதற்கும் இயலுமானவாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சமூக, பொருளாதார நிலைமைகள் மற்றும் தொழிலாளர் சமவாயம் மற்றும் தரநிர்ணயங்களுக்கு அமைவான வகையில் சட்ட ஏற்பாடுகளை வகுத்தமைப்பது இந்த அமைச்சின் காலத்திற்கேற்ற பொறுப்பாகும். தற்போது, இலங்கையில் தொழிலாளர் சமூகத்தின் உரிமைகள் மற்றும் நலனை உறுதி செய்வதற்காக சுமார் 50 கட்டளை சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் நடைமுறையில் உள்ளன. தற்போதைய மற்றும் எதிர்கால சவால்களை நிவர்த்தி செய்வதற்கும், உழைக்கும் மக்களின் உரிமைகளை உறுதி செய்வதற்கும், சட்டங்களுக்கு இடையிலான சிக்கல்களை நீக்கி எளிமைப்படுத்துவதற்கும், அனைத்து தரப்பினருக்கும் அனுகூல களை உறுதி செய்வதற்கும் தொடர்புடைய சட்டங்களிடையே காணப்படும் சிக்கல்களை அகற்றி எளிமைப்படுத்தி அனைத்து தரப்பினரும் அனுகூலமடைவதை உறுதிப்படுத்துவதற்காக உரிய சட்டம் மற்றும் கட்டளைகளைத் திருத்துவதற்கு அமைச்சு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

- **இன்றைய காலத்திற்குப் பொருத்தமான ஏற்பாடுகளுடன் தொழில் சட்டங்களைத் திருத்துதல்**.

தொழில் திணைக்களத்தால் அமுல்படுத்தப்படும் தற்போதைய கட்டளை சட்டங்கள் தற்போதைய சமூக-பொருளாதார மாற்றங்கள் மற்றும் வேலை உலகில் ஏற்படும் தொடர்புடைய மாற்றங்களை நிவர்த்தி செய்ய போதுமானதாக இல்லை என்றாலும், உழைக்கும் சமூகத்தின் உரிமைகளை உறுதி செய்து வாணிப முயற்சிகளின் தொடர்ச்சியான இருப்பை பேணுதல் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கும் வசதிகளை செய்வதற்கு தொழில் சட்டத்தின் தேவை எழுந்துள்ளது. அதுபோல சட்டங்களுக்கு இடையிலான சிக்கல்களை நீக்கி எளிமைப்படுத்துவதன் மூலம் அனைத்து தரப்பினருக்கும் அனுகூல களை உறுதி செய்வதும் அவசியம். இதைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள 13 சட்டங்களின் ஏற்பாடுகளை திருத்துவதற்காக, அவி /23/1439/625/025 இலக்க மற்றும் 07.08.2023 திகதியிட்டதும் அவி /23/1439/625/025 –I இலக்க 30.10.2023 திகதியிட்டதுமான அமைச்சரவை தீர்மானங்களின பிரகாரம் ஒரு வரைவு சட்டத்தை தயாரிப்பதற்காக, 17.11.2023 அன்று சட்டமூல வரைஞருக்கு வரைவு அனுப்பப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கக் கொள்கைகளுக்கு ஏற்ப இந்த வரைவு மேலும் பரிசீலிக்கப்பட்டு, தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு, அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

· 1954 **ஆம் ஆண்டின்** 19 **ஆம் இலக்கம கடை மற்றும் அலுவலக பணியாளர் சட்டத்தை ஊழியர்களின் நலனுக்கும் இன்றைய காலத்திற்கும் ஏற்றவாறு திருத்துதல்.**

தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப நிறுவனங்களில் இரவு வேலைகளில் பெண்களைப் பணியமர்த்துவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கிய, 2024 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம்; கொண்ட கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் தொடர்பான சேவை ஒழுங்குமுறை படுத்தல் (திருத்தப்பட்ட) சட்டம், 09.05.2024 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

· 1958 **ஆம் ஆண்டின்** 15 **ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தை ஊழியர்களின் நலனுக்கும் இன்றைய காலத்திற்கும் ஏற்றவாறு திருத்துதல்.**

இலக்கம்; அவி/24/1234/625/017 மற்றும் 2024.07.01 திகதியிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், ஒரு சட்டமூலமாக தயாரிப்பதற்காக சட்ட வரைஞருக்கு இது 2024.08.06 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மேலும் அடையாளம் காணப்பட்ட திருத்தங்களை தற்போதைய அரசாங்கக் கொள்கைகளுக்கு இணங்க பரிசீலித்த பிறகு தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

· 2009 **ஆம் ஆண்டின்** 38 **ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனச் சட்டத்தில் திருத்தம்.**

அவி/23/0396/625/003 இலக்கம் தாங்கிய 07.03.2023 திகதியிட்ட அமைச்சரவை தீழ்மானத்தின் பிரகாரம், 19.04.2023 அன்று ஒரு வரைவு சட்டமூலம் சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளது. சட்ட வரைஞர் அதிலுள்ள சில விடயங்கள்; குறித்து அவதானிப்புகளைக் கோரியுள்ளாதோடு, புதிய உலகளாவிய மற்றும் சந்தைத் தேவைகளுக்கு ஏற்ப மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய திருத்தங்கள் சகிதம் தற்போதைய அரசாங்கக் கொள்கைகளுக்கு ஏற்பத் திருத்தங்களையும் மேற்கொண்டு அமைச்சரவையில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.1.2 வெளிநாட்டு உறவுகள்

### 2.1.2.1 சர்வதேச தொழில் நியமங்களை பேணுதல்

I. சர்வதேச தொழிலாளர் தாபன யாப்பு இலக்கம் 22 இன் கீழ், 2024 ஆம் ஆண்டிற்கான 04 சமவாயங்கள் 04 இற்காக 04 அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சர்வதேச தொழிலாளர் தாபனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

II. சர்வதேச தொழிலாளர் தாபன யாப்பு இலக்கம்; 19 இன் கீழுள்ள அங்கீகரிக்கப்படாத சமவாயத்துக்கு 01 அறிக்கை தயாரிக்கப்பட்டு சர்வதேச தொழிலாளர் தாபனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

III. சிறுவர் தொழில் ஒழிப்புக்கான தேசிய வழிகாட்டுதல் குழு (NSCECL) தொடர்பான 02 கூட்டங்களை நடத்துதல் மற்றும் அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.

IV. சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் சமூகப் பாதுகாப்பு அமைப்பை நிறுவுவது குறித்த நடைமுறையிலுள்ள முத்தரப்புக் குழு கூட்டத்தின் அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ((Establishment of Social Security Fund) இது தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரும், தொழில் அமைச்சின் செயலாளரும் இணைந்து, இலங்கையின் தேசிய சமூகப் பாதுகாப்புக் கொள்கையை மீளாய்வு செய்து திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளது. அதுபோல திருத்தப்பட்ட தேசிய சமூகப் பாதுகாப்புக் கொள்கையை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஊடாக முன்வைக்குமாறு அமைச்சரவையால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

V. ஜெனீவாவில் ஆண்டுதோறும் நடைபெறும் சர்வதேச தொழிலாளர் சம்மேளன மாநாட்டிற்கான முத்தரப்பு பிரதிநிதிகளின் பங்கேற்பு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் அதன்படி, 2024.06.03 முதல் 2024.06.14 வரை சர்வதேச தொழிலாளர் மாநாடு நடைபெற்றதோடு அதில் இலங்கையைப்

பிரதிநிதித்துவப்படுத்தி 09 பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

VI. சுனிசி சீரிய நடவடிக்கையின் கீழ், பொருளாதார நெருக்கடியின் காரணமாக அவசரத் தேவையாக இருந்த தொழில் சந்தைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன், வேலைவாய்ப்பு மீட்பு மூலோபாய விருத்தியை (Development of Employment Recovery Strategy) சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் முத்தரப்புக் குழுவின் மூலம் உருவாக்குதல், தொடங்குதல், மற்றும் செயல்படுத்தி வருதல் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருத்தல்.

VII. வெளிநாட்டு உதவித்தொகை செயலமர்வுகள் மற்றும் பயிற்சித் திட்டங்களில் ஈடுபடுத்த இந்த அமைச்சுக்கு தொடர்புடைய பிற நிறுவனங்களின் மற்றும் தொழில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பங்குபற்ற நடவடிக்கை எடுத்தல். ஜனவரி 1, 2024 முதல் டிசம்பர் 31, 2024 வரையிலான காலகட்டத்தில் 67 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயிற்சி கற்கைநெறிகள் மற்றும் செயலமர்வுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

VIII. இலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் இடையே தொழில் துறைக்குரிய சமூகப் பாதுகாப்பு கல்வி தொடர்பாக எதிர்காலத்தில் முடிவு செய்யப்படவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் தொடர்புடைய அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஏற்புடையதாக பணியாற்றுதல்.

- இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான ஏற்பாடுகள் செய்தல். இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதோடு இந்தியத் தரப்பிலிருந்து உறுதிப்படுத்தலுக்காக எதிர்ப்பார்த்து காத்திருக்கிறது.

- இலங்கை தேசிய தொழில் கற்கைள் நிறுவகத்திற்கும் இந்தியாவின வி.வி. கிரி தேசிய கல்வி நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான ஏற்பாடுகள் செய்தல். இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதிக்காக எதிர்ப்பார்த்து காத்திருக்கிறது.

IX. சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் கருத்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் தொடர்பான அனைத்து ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல். இதன் கீழ், 'சுசினி' சீரிய நடவடிக்கையின் உள்நாட்டு நிகழ்ச்சித் திட்ட ((DWCP) கூட்டமும் இரண்டு தொழிலின்மை காப்பீட்டு ஆலோசனைக் கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. சர்வதேச தொழிலாளர் தாபனத்தால் தொழிலின்மை காப்பீடு குறித்த ஆயுட்கால அறிக்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

X. தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்காக இலங்கைக்கு வருகை தரும் சர்வதேச தொழிலாளர் தாபன அதிகாரிகளுக்கான விசா கோரிக்கை கடிதங்களை வெளியுறவு அமைச்சுக்கு சமர்ப்பித்தல். அதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை 42 கோரிக்கை கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

XI. இலங்கை மத்திய வங்கியினால ஆண்டுதோறும் வெளியிடப்படும் காலத்துக்குரிய பொருளாதார அபிவிருத்தியின் பிரதான அம்சங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான எதிர்கால நோக்கு குறித்த அறிக்கைக்கு தொடர்புடைய தகவல்களை வழங்கியதோடு மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைக்கு தொடர்புடைய அறிக்கையையும் சமர்ப்பித்துள்ளது.

XII. பெருந்தோட்ட தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பாக 05 பிரதான குழு கூட்டங்களையும் 03 உபக்குழு கூட்டங்களையும் பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களுடன் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதோடு செங்கொடி அமைப்புடன் 01 கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

### 2.1.3 திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

**· நடமாடும் சேவை நிகழ்ச்சிகளை நடத்துதல்**

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் எதிர்கால தொழில் சந்தையில் சேரவிருக்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர் குடும்பங்களின் இளம் பிள்ளைகளுக்கு அவர்களின் கல்வி மற்றும் தொழில்முறை திறன்களை மேம்படுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாய்ப்புகளை அறிமுகப்படுத்துதல், புலம்பெயர்ந்த பணியாளர் வாழ்க்கைத் தரத்தை மேலும்

மேம்படுத்த வழங்க எதிர்பார்க்கும் சேவைகள், மற்றும் அவர்களின் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வாய்ப்புகளை புலம்பெயர் தொழிலாளர் சங்க உறுப்பினர்களுக்கு வாய்ப்பு வழங்குதல், தொழில் சந்தையில் சரியாக அங்கீகரிக்கப்படாத வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் தொழில்முறை கண்ணியத்தை மேம்படுத்துவதற்காக 'கருசரு' திட்டத்தை நடத்துதல், எதிர்கால வேலை சந்தைக்கு தயார்படுத்துதல் மற்றும் அறிவு மற்றும் திறன்களை வழங்குவதற்காக பாடசாலை சிறார்கள் மற்றும் பாடசாலையை விட்டு வெளியேறியவர்களுக்கான 'ஸ்மார்ட் கிளப்' ''Smart Club'' எண்ணக்கருத்தை பிரபலப்படுத்துதல், மற்றும் குறைந்த வசதிகள சகிதமான பாடசாலை மாணவர்களுக்கு சிரம வாசனா நிதியம் மூலம் பாடசாலை உபகரணங்களை வழங்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு "GLOCAL FAIR -2024" எனும் பெயரில் மாவட்ட அளவில் 24 நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

**· செயற்சார் திட்டமிடல் தொடர்பான விடயங்கள்**

தற்போதைய அரசாங்கக் கொள்கைகளுக்கு ஏற்ப அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் வருடாந்த செயல்சார் திட்டங்களைத் திருத்துவதற்கான ஆரம்பப் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**· சுனிசி சீரிய நடவடிக்கை திட்டத்தை செயற்படுத்தல்**

சுனிசி சீரிய நடவடிக்கை நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டம் வேலைவாய்ப்பு உருவாக்கம், மேம்படுத்தல் மற்றும் தேசிய உற்பத்தித்திறன், வேலைத்தள உரிமை, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக கலந்துரையாடல் எனும் நான்கு தூண்களுக்குள் செயல்படுகிறது. இந்த 4 பிரதான தூண்களுக்கு மேலதிகமாக, ஒவ்வொரு துறையும் உற்பத்தித்திறன் மேம்பாடு மற்றும் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தல் ஆகிய விடயப் பிரிவுகளை தழுவுமாறு நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் அனைத்து பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்படுகிறது.

சுனிசி சீரிய நடவடிக்கை திட்டத்தின் கீழ், பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயல்படுத்த பின்வரும் நிறுவனங்களுக்கு 8.4 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை** 2.1 - சுனிசி சீரிய நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்த

| | **நிறுவனம்** | **ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.)** | **பயன்படுத்தப்பட்ட தொகை (ரூ.)** | **செலவினத்தின் சதவீதம்** |
|---|---|---|---|---|
| 01 | 01 **தொழில் திணைக்களம்** | | | |
| i | சமூக உரையாடல் மற்றும் வேலைத்தள ஒத்துழைப்பு பிரிவு | 3,039,000.00 | 1,682,896.00 | 56% |
| ii | பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவு | 3,837,000.00 | 2,966,918.97 | 77% |
| iii | தொழில்சார் சுகாதாரப் பிரிவு | 244,000.00 | 244,000.00 | 100% |
| v | தொழிற்றுறை பாதுகாப்பு பிரிவு | 915,000.00 | 909,295.00 | 99% |
| vi | திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு | 453,000.00 | 375,092.25 | 83% |
| | மொத்தம் | 8,488,000.00 | 6,178,202.22 | 72.78% |

### 2.1.4. நிர்வாக மற்றும் தாபன விவகாரங்கள்

I. அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பித்ததன் கீழ், ஜனவரி முதல் டிசம்பர் 2024 வரை இந்த அமைச்சு 26 அமைச்சரவை விஞ்ஞாபனங்களை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளது, மேலும் அவற்றில் 20 இக்கான அமைச்சரவை முடிவுகள் பெறப்பட்டுள்ளன. மீதமுள்ள விஞ்ஞாபனங்கள்; பல்வேறு காரணங்கள அடிப்படையில், அவதானிப்புகள், அனுமதிகள் பெற பிற தேவையான நடவடிக்கைகளுக்காக பல்வேறு நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

II. மீளாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில், ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் போன்ற அரச நிறுவனங்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும் 713 பொது முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன. இவை அனைத்தும் தொழில் திணைக்களம் மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டு, பதில் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

மேலதிகமாக, 1978 ஆம் ஆண்டு வேலைநிறுத்தம் காரணமாக வேலை இழந்த துல்ஹிரிய-பூகொடை தேசிய புடவைக் கைத்தொழில் கூட்டுத்தாபன ஊழியர்களின் கோரிக்கை பிரகாரம் நட்டஈடு வழங்கும் முன்மொழிவுக்கு இணங்க, சம்பந்தப்பட்ட ஊழியர்களைப் பற்றிய தகவல்களைப் பெற 2259 ஊழியர்களுக்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன. அதில் தகுதி பெற்ற 1717 ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்க அமைச்சரவை அனுமதி பெற்று, தொடர்புடைய நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்க அந்தத் தகவல் நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

III. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் 26 கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளதோடு, அனைத்து கோரிக்கைகள் தொடர்பாகவும் தகவல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், இந்த அமைச்சினால் பொதுமக்களின் முறைப்பபாடுகள், பரிந்துரைகள் மற்றும் கருத்துகளைச் சமர்ப்பிப்பதற்காக ஒரு வாட்ஸ்அப் whatsapp இலக்கத்தை (070 722 7877) அறிமுகப்படுத்தப்பட்டது.

VI. பல்வேறு நிறுவனங்கள் நடத்திய பயிற்சி வகுப்புகளில் 43 அமைச்சு உத்தியோகத்தர்கள் மீளாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் பங்கேற்றிருந்தனர். இந்த உத்தியோகத்தர்கள் சேவை பிரமாணக்குறிப்புகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் தேவைகளுக்கு ஏற்ப தங்கள் கடமைகளைச் செய்வதற்கு அவசியமான பயிற்சி கற்கைநெறிகளை தொடருமாறு பணிக்கப்பட்டுள்ளதோடு, செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின்படி அந்தச் செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை** 2.2 - நிறுவன நடவடிக்கைகளின் முன்னேற்றம்

| | செயற்பாடு | முன்னேற்றம் |
|---|---|---|
| 01 | பாராளுமன்ற வாய்மொழி கேள்விகளுக்கு பதிலளித்தல் | 12 |
| 02 | பொதுமக்கள் முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் | 1 |
| 03 | அமைச்சரவையின் அனுமதிக்காக ஆண்டு அறிக்கைகளை சமர்ப்பித்தல் | 2 |
| 04 | பாராளுமன்றத்திற்கு ஆண்டு அறிக்கைகளை சமர்ப்பித்தல் | 5 |
| 05 | அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புகள் | 6 |

## 2.2. தொழில் திணைக்களம்

### 2.2.1. ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பு

இலங்கையில் தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறைகளில் பணிபுரியும் ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பிற்காக, 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் வருங்காலநிதியச் சட்டத்தின் மூலம் ஊழியர் வருங்காலநிதியம் நிறுவப்பட்டது. இந்த நிதியத்தின் நிர்வாக செயற்பாடுகள் தொழில் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுவதோடு இலங்கை

மத்திய வங்கியின் நாணய சபையானது அதன் நிதிகளை நிர்வகிப்பதற்கு பொறுப்பாகும். அதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை தொழில் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு.

**· ஊழியர் சேமலாப நிதி அனுகூல பலன்களை செலுத்துதல்**

2024.01.01 முதல் 2024.12.31 வரை, ஊழியர்களின் சேமலாப நிதி அனுகூல பலன்களை வழங்குவது தொடர்பாக 166,060 தீர்மான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதோடு மேலும் இது தொடர்பான தகவல்கள் கீழே உள்ள வரைபடத்தில் விளக்கப்பட்டுள்ளன.

**வரைபடம் 2.1** – 2024.01.01 முதல் 2024.12.31 வரை ஊழியர் சேமலாப நிதி அனுகூல பலன்களை செலுத்துவதற்காக அனுப்பப்பட்ட தீர்மான கடிதங்களின் எண்ணிக்கை




**· பங்களிப்புகளைச் செலுத்தத் தவறிய வேலை வழங்குநர்களுக்கு பங்களிப்புகளை அறவிடல் தொடர்பான அறிவிப்புகளை அனுப்புதல்.**

பங்களிப்புகளைச் செலுத்தத் தவறிய வேலை வழங்குநர்களுக்கு அந்த பணத்தை அறவிட திணைக்களம் ஆரம்ப அறிவிப்புகள் மற்றும் இறுதி அறிவிப்புகளை அனுப்பியுள்ளது என்பதோடு மேலும் அவைகளுக்கு அவர்கள் பதிலளிக்கவில்லை என்றால், சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு பங்களிப்பு பணம் மற்றும் மேலதிக கட்டணங்களை அறவிட்டு கணக்கில் வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**அட்டவணை** 2.3 - பங்களிப்புகள் அறவிடல் தொடர்பான அறிவிப்புகளை வழங்குதல்

| அறிவிப்புகள் | அனுப்பப்பட்ட அறிவிப்புகளின் எண்ணிக்கை | அறிவிப்புகள் தொடர்பாக கணக்கிடப்பட்ட தொகை ரூ. மி |
|---|---|---|
| முதல் அறிவிப்பு | 14,412 | 7247 |
| இறுதி அறிவிப்பு | 7040 | 391 |

· **ஊழியர் சேமலாப நிதியத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கலின் செயலாற்றுகை அதிகரித்தல்**.

ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான வாடிக்கையாளர்களுக்கு ஒரே இடத்தில் சேவைகளை வழங்க இயலுமானதாக தொழில் செயலகக் கட்டிடத்தின் முதல் தளத்தில் புதிய அலுவலக வளாகம் 06.08.2024 அன்று திறக்கப்பட்டது. அதன்படி, முழு அனுகூல பலன் கொடுப்பனவுப் பிரிவு, இறந்த உறுப்பினர்களின் அனுகூல பலன் கொடுப்பனவுப் பிரிவு (L பிரிவு), 30% ஆரம்ப அனுகூல பலன் கொடுப்பனவுப் பிரிவு மற்றும் மத்திய கோப்புகள் பிரிவு ஆகியவை இந்த முதல் தளத்தில் நிறுவப்பட்டு சேவைகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அதேபோல், கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, கொழும்பு கிழக்கு, கொழும்பு மேற்கு மற்றும் கொழும்பு மத்திய மாவட்ட தொழில் அலுவலகங்கள் தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களாக ஊழியர்களைப் பதிவு செய்யும் புதிய முறையை செயல்படுத்த தேவையான வசதிகள் இந்த இடத்தில் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக உறுப்பினர்களிடையே சரியான அறிவூட்டல் இல்லாததால் எழும் சிக்கல்களைக் குறைப்பதற்காகவும், உறுப்பினர்கள் மற்றும் வேலை வழங்குநர்கள் இருவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், 2024 ஆம் ஆண்டு முழுவதும் இலங்கை மத்திய வங்கியின் ஆதரவுடன் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் ஊழியர்களைப் பதிவு செய்வதற்கான புதிய மென்பொருளை உருவாக்கும் செயற்பாடு 2023 இல் மேற்கொள்ளப்பட்டதோடு அதன் மேல் நடவடிக்கைகள் 2024 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, அனைத்து மாவட்ட மற்றும் உப மாவட்ட தொழில் அலுவலகங்களிலும் இந்தப் புதிய மென்பொருளை நிறுவும் செயற்பாடு டிசம்பர் 2024 க்குள் நிறைவடைந்தது. இது ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் ஊழியர்களைப் பதிவு செய்வதை மிகவும் வினைத்திறனாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தொழில் தருநர் பதிவை ஊக்குவிப்பதற்கும் நிறுவன பதிவேட்டை நெறிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டன. அதன்படி, தொழில் அலுவலகங்கள் மாதத்திற்கு குறைந்தது 04 பெருமளவிலான ஆய்வுகளை நடத்தத் தொடங்கியுள்ளன. ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வை அதிகரித்தல், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி சபை போன்ற பிற அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களின் தரவு அமைப்புகளில் கிடைக்கும் நிறுவனங்கள் பற்றிய தகவல்களைப் பயன்படுத்தி கள விசாரணைகளை ஊக்குவித்தல். 2025 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட பிற செயற்பாடுகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதி அனுகூலப் பலன் செலுத்தல் முறையை எளிமைப்படுத்தும் வகையில், ஊழியர் சேமலாப நிதி அனுகூலப் பலன் விண்ணப்பப் படிவங்களில் செய்ய வேண்டிய திருத்தங்கள், தரவு அமைப்புகளில் தரவு உள்ளீடு தொடர்பாக செய்ய வேண்டிய திருத்தங்கள் போன்றவை அடையாளம் காணப்பட்டு, தொடர்புடைய நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

### 2.2.2. தொழிற்றுறை தொடர்பு

**· சட்டப்பூர்வ உரிமைகள் மீறல்கள் குறித்த முறைப்பாடுகளைத் தீர்த்து வைப்பது மற்றும் தொழிற்றுறை பிணக்குகளைத் தீர்த்தல்**

தொழில் திணைக்களத்தின் மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களுக்கு மற்றும் தலைமை அலுவலகத்திற்கு ஊழியர்கள் அல்லது தொழிற்சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட நியதி சட்டப்பூர்வ உரிமைகள் மீறல்கள் மற்றும் தொழிற்றுறை பிணக்குகள் தொடர்பாக முறைப்பாடுகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேபோல், முறைப்பாட்டு விசாரணை அல்லது நடத்தப்பட்ட நிறுவன விசாரணையில் அதிருப்தி அடைந்த ஒருவரால் முறையான விசாரணையை நடத்துமாறு தொழில் ஆணையாளர் நாயகத்துக்கு செய்யப்பட்ட கோரிக்கைகளும் தேவைக்கேற்ப மறு விசாரணைக்கு பரிந்துரைக்கப்பட்டன.

**வரைபடம்** 2.2 - 2020 ஆம் ஆண்டு முதல் 2024.10.31 வரை நியதி சட்டப்பூர்வ உரிமைகளை மீறுவது தொடர்பான முறைப்பாடுகள் பெறப்படலும் தீர்க்கப்படலும்




**வரைபடம்** 2.3 - 2020 முதல் 31.10.2024 வரையிலான தொழில் தகராறுகள் தொடர்பான பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் தீர்வுகள்



தொழில் திணைக்களத்திடம் முறைப்பாடு; அளிக்க விரும்பும் தனியார் அல்லது பகுதியளவிலான அரசத்துறை ஊழியர், தங்கள் வேலைவாய்ப்பு தொடர்பான எந்தவொரு பிரச்சினை குறித்தும் https://cms.labourdept.gov.lk என்ற மின்னணு சேவை (e- Service) மூலம் தொழில் திணைக்களத்திடம் நிகழ்நிலையில் (online) முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க மார்ச் 2022 முதல் வசதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த முறைப்பாடு முகாமைத்துவ அமைப்பில் (Complaint Management System – CMS) தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார இதவடிவ தொகுதி (OSH Module) மற்றும் சட்ட இதவடிவ தொகுதியைச் (Legal Module) சேர்ப்பதற்கான தொடர்புடைய மென்பொருள் விருத்தி செயற்பாடுகள் நடந்து வருகின்றன.

மேலும், தொழில் திணைக்களத்துக்கு பெறப்படும் முறைப்பாடுகள் மற்றும் மனுக்களை தீர்க்க கையாளும் நடவடிக்கை, ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையின்படி மேற்கொள்ளப்படுவதன் மூலம் அந்த நடவடிக்கையை மிகவும் வினைத்திறனாகவும் விளைதரமாகவும் நிகழ்த்த முடியுமென்பதால் அது தொடர்பான வழிகாட்டியாக முறைப்பாடுகள் மற்றும் மனுகளை தீர்க்க ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் மற்றும் அதற்குரியதான அறிவுறுத்தல் கோவை தயாரிக்கப்பட்டு, இந்த நடைமுறைகள் நவம்பர் 2021 முதல் தொடர்புடைய அலுவலகங்கள் மற்றும் பிரிவுகளால் பயன்படுத்தப்படுகின்றது. இந்த நடவடிக்கைகளை மேலும் வினைத்திறனாக செய்வதற்காக சர்வதேச தொழிலாளர் தாபன தொழில்நுட்ப உதவியைப் பெற்று கொண்டு தொழிற் திணைக்களத்துக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் மற்றும் மனுக்களை கையாள்வது தொடர்பில் முறையான விரிவான வழிகாட்டியை ((A comprehensive Guide for Handling of Inquiries on Labour related Complaints)) தயாரிக்க தேவையான அடிப்படை செயற்பாடுகள் 2024 ஆண்டில் தொடங்கப்பட்டன

**· கூட்டு ஒப்பந்தங்களுக்கு வேலை வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் இருவரையும் ஊக்குவித்தல்.**

கூட்டு ஒப்பந்தங்களில் நுழைவதன் மூலம், ஊழியர்களுக்கு தொழில் சட்டங்களால் உரித்தாகும் உரிமைகளை விட அதிக அனுகூல பலன்கள் வழங்கப்படுகின்றன என்பதால் வேலை வழங்குநர்கள் தரப்பினருக்கு ஊழியர்களிடமிருந்து மிகவும் பயனுள்ள சேவையைப் பெறுவதற்கு பொருத்தமான நிபந்தனைகளை அடையவும் முடியும்.

சமூக கலந்துரையாடல் மூலம் வேலை வழங்குநர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையிலான இத்தகைய கூட்டு ஒப்பந்தங்கள் எட்டப்படுவது ஊக்குவிக்கப்படுகின்றது. 01.01.2024 முதல் 31.12.2024 வரையான காலப்பகுதியில் காலம் நீட்டிக்கப்பட்ட 14 கூட்டு ஒப்பந்தங்களும் அடங்கலாக 31.12.2024 திகதியன்று, 225 கூட்டு ஒப்பந்தங்கள் நடைமுறையில் உள்ளன.

**· நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

பிராந்திய அலுவலகங்கள் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் உள்ள தொழிற்றுறை உறவுகள் பிரிவு மூலம் தீர்க்க முடியாத தொழிற்றுறை பிணக்குகள் நடுத்தீர்ப்பு அல்லது கைத்தொழில் நியாய சபைக்கு பரிந்துரைக்கப்படுகின்றன. 2024.01.01 முதல் 2024.12.31 வரையிலான காலகட்டத்தில் நடுத்தீர்ப்புக்கு பரிந்துரைக்கப்பட்ட 81 பிணக்குகள் உட்பட 219 பிணக்குகள் 2024 ஆம் ஆண்டில் தீர்க்க திட்டமிடப்பட்டன. இவற்றில், 111 பிணக்குகள் விசாரிக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டுக்குள் 70 நிதிக்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதோடு மேலும் 41 நிதிக்கொடைகள் எதிர்காலத்தில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளன. மேலும், 31.12.2024 திகதியன்று, 108 பிணக்குகள் தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**· தொழிற்சங்கங்களின் பதிவு**

தொழிற்சங்க கட்டளைச் சட்டத்தின் கீழ், ஒவ்வொரு தொழிற்சங்கமும் தொழில் திணைக்களத்தின் தொழிற்சங்கப் பதிவாளரிடம் பதிவு செய்வது கட்டாயத் தேவையாகும். அதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட தொழிற்சங்கங்கள்/சம்மேளனங்கள் எண்ணிக்கை 123 ஆகும். 31.12.2024 திகதியன்று செல்லுபடியாகும் தொழிற்சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 2141 ஆகும். 2024 ஆம் ஆண்டில் 100 தொழிற்சங்கங்கள் வறிதாக்கம் செய்யப்பட்டன.

**· வேலை நிறுத்தங்களைத் தீர்க்க பொருத்தமான தலையீடுகளைச் செய்தல்**

தொழிற்றுறை பிணக்கு வேலை நிறுத்தமாக மாறக்கூடிய சூழ்நிலைகள் அவதானிக்கபட்டதும் உடனே திணைக்களம் நிலைமையைத் தடுக்க தலையிடுவதோடு வேலைநிறுத்தம் ஏற்பட்டால், வேலைநிறுத்தம் தொடர்பான பிணக்கைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 2024.01.01 முதல் 2024.12.31 வரை பதிவான வேலைநிறுத்தங்கள் குறித்த தகவல்கள் பின்வருமாறு.

**அட்டவணை** 2.4 - வேலைநிறுத்தங்கள் குறித்த அறிக்கையிடப்பட்ட தரவு - 2024.01.01 முதல் 2024.12.31 வரை

| துறை | பதிவான வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கேற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பெருந்தோட்டம் | 04 | 1199 | 5879 |
| உற்பத்தி | 06 | 4795 | 22,550 |
| **மொத்தம்** | **10** | **5994** | **28,429** |

**· வேலை வழங்குநர்க்கும் பணியாளருக்கும் இடையே கலந்துரையாடலை நிகழ்த்துதல்**

தனியார் மற்றும் அரசத்துறை நிறுவனங்களின் வேலை வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் இருவருக்கும் தொழிலாளர் சட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, தொழில்தருநர் மற்றும் பணியாளரின் இரு தரப்பினருக்கும் இடையே தொழிற்றுறை அமைதியை உறுதி செய்யும் ஒரு பணிச்சூழலை உருவாக்குவதற்காக, இந்தத் திணைக்களம் திட்டங்களை ஏற்பாடு செய்து நடத்தியது.

**அட்டவணை** 2.5 - சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தள ஒத்துழைப்பு ஊக்குவிப்புப் பிரிவால் நடத்தப்பட்ட அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய தகவல் - 2024.01.01 முதல் 2024.12.31 வரை

| நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை / பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **சமூக கலந்துரையாடல் ஊக்குவிப்பு** | சமூக உரையாடல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | 155 | 9544 |
| | சமூக மேடை நிகழ்ச்சித திட்டங்கள் | 24 | 2140 |

மேற்கூறிய அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக, நிறுவன மட்டத்தில் சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தள ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் நோக்கில், தொடர்புடைய நிறுவனங்களுக்கு தொழிற்றுறை நல்லிணக்கத்திற்கான விசேடச் சான்றிதழ்களை வழங்கும் செயற்பாடு 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, தொழிற்றுறை நல்லிணக்கத்திற்கான விசேடச் சான்றிதழ் விருது வழங்கும் விழா 2024.11.06 அன்று தொழில் தலைமைச் செயலகத்தின் 10வது மாடி கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

வேலை வழங்குநர்கள் தொழில் சட்டங்களுடன் சுயமாக இணங்குவது ஒரு நிலைபேறான வேலை வழங்குநர்-பணியாளர் உறவை உருவாக்குகிறது, இது வேலை வழங்குநர்களுக்கு ஏராளமான பொருளாதார அனுகூல களையும் தருகிறது. எனவே, தொழில் சட்டங்களுடன்

வேலை வழங்குநர்கள் சுய இணக்கத்தை ஊக்குவிக்க தொழில் திணைக்களம் எல்லா சமயங்களிலும் செயற்படும்;. அதன்படி, தொழில் சட்டங்களுடன் சுய இணக்கத்தை நிரூபிப்பது (Self Compliance to Labour laws) தொடர்பாக வேலை வழங்குநர்களுக்கு ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிப்பதற்காக சர்வதேச தொழிலாளர் தாபனத்திடமிடமிருந்து தொழில்நுட்ப உதவியைப் பெறுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, மேலும் அதன் எதிர்கால நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

### 2.2.3. வேலை வழங்குநர்களால் ஊழியர்களின் வேலையில் ஈடுபடுத்தவதை சோதனை செய்தல்

வேலை வழங்குநர்கள் பணியாளர்களை வேலையில் ஈடுபடுத்துவதற்கு சட்டதிட்டங்களை முறையாகப் பின்பற்றுகிறார்களா என்பதைச் சரிபார்க்க 2024.01.01 முதல் 2024.12.31 வரை நடத்தப்பட்ட சோதனை ஆய்வுகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

**வரைபடம் - நடத்தப்பட்ட சோதனைகள் - 2024.01.01 முதல் 2024.12.31 வரையிலான முன்னேற்றம்**




வேலை வழங்குநர்கள் பணியாளர்களை வேலையில் ஈடுபடுத்துவதற்கு சட்டதிட்டங்களை முறையாகப் பின்பற்றுகிறார்களா என்பதைச் சரிபார்க்க 2024.01.01 முதல் 2024.12.31 வரை நடத்தப்பட்ட சோதனை ஆய்வுகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

மேலும், தொழில் உத்தியோகத்தர்கள் தொழிலாளர் ஆய்வுத் தகவல்களைச் சமர்ப்பிக்கப் பயன்படுத்திய தொழிலாளர் ஆய்வு அறிக்கை, தகவல் கிடைக்கும் விதத்தில் திருத்தப்பட்டு, நவம்பர் 2024 முதல் பயன்படுத்தத் தொடங்கியது.

தொழிலாளர் அலுவலகங்களின் அதிகார எல்லைக்குள் (குறிப்பாக நகர எல்லைக்குள்) அமைந்துள்ள நிறுவனங்களை மிகவும் முறையாகவும் வினைத்திறனாகவும் ஆய்வு செய்வதற்காக, ஒரு மாவட்ட தொழில் அலுவலகம் மாதத்திற்கு 04 குழு ஆய்வுகளையும், உப தொழிலாளர் அலுவலகங்கள் மாதத்திற்கு 02 குழு ஆய்வுகளையும் நடத்தும் ஒரு முறை தொடங்கப்பட்டது.

தொழிலாளர் ஆய்வு முறையை தற்போதைய சமூக-பொருளாதார சூழல்களுக்கு ஏற்றவாறு நெறிப்படுத்துவதில் தொழில்நுட்ப உதவியைப் பெறுவதற்காக சர்வதேச தொழிலாளர் தாபன பிரதிநிதிகளுடன் முதற்கட்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அதன்படி, 2025 ஆம் ஆண்டில் மிகவும் விரிவான தொழிலாளர் ஆய்வு சட்டகம் (A Comprehensive Framework for Labour Inspections) தயாரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.2.4. ஊழியர்கள் வேலை ஈடுபடுத்துவதற்கு குறித்த உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டரீதியான பாதுகாப்பு.

ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்தத் திணைக்களம் பல சட்டங்களைச் செயற்படுத்துகிறது. அதன்படி, தொழில் திணைக்களத்தால் இந்தச் சட்டங்களை மீறும் வேலை வழங்குநர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் மூலம் ஊழியர் உரிமைகளைப் பாதுகாக்கப்படுகின்றது.. அதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை திணைக்களத்தால் எடுக்கப்பட்ட நீதித்துறை நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றம் கீழே உள்ள அட்டவணையின்படி உள்ளது.

**வரைபடம்** 2.4 – நீதவான் நீதிமன்றங்களில் ஒப்படைக்கப்பட்ட வழக்குகள் மற்றும் முடிவுறுத்தப்பட்ட வழக்குகள் - 2024.01.01 முதல் 2024.12.31 வரை



**அட்டவணை** 2.6 - சட்ட விவகாரப் பிரிவின் நேரடித் தலையீட்டால் நடத்தப்படும் நீதித்துறை நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள்.

| நீதிமன்றம் | **31.12.2023** திகதியன்று நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை | **01.01.2024** முதல் **31.12.2024** வரை மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | **31.12.2024** திகதியன்று முடிக்கப்பட்ட மேல்முறையீட்டு வழக்குகளின் எண்ணிக்கை | **31.12.2024** திகதியன்று நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| உச்ச நீதிமன்றம் | 133 | 19 | 9 | 143 |
| மேல் முறையீட்டு நீதிமன்றம் | 425 | 66 | 51 | 440 |
| உயர் நீதிமன்றம் | 107 | 23 | 26 | 104 |
| வர்த்தக உயர் நீதிமன்றம் | 224 | 11 | 9 | 226 |

**அட்டவணை** 2.7 - தொழில் துறை தொடர்பான புதிய சட்டங்களைத் திருத்துவதிலும் அறிமுகப்படுத்துவதிலும் முன்னேற்றம்

| **சட்டத்தின் பெயர்** | **திருத்துவதன் நோக்கம்** |
|---|---|
| 2024 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கடை மற்றும் அலுவல (சேவை மற்றும் ஊதிய ஒழுங்குமுறை) (திருத்தம்) சட்டம் | தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட வணிக செயல்முறைகள் மற்றும் அறிவு செயல்முறைகளை வெளிவாரி சேவை கொள்ளல் செய்த நிறுவனங்களில் பணிபுரியும் பெண் ஊழியர்களை இரவு நேரங்களில் வேலை செய்ய ஒழுங்குகளின்படி 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல் |
| 2024 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கம்; கொண்ட ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச ஊதியம் (திருத்தம்) சட்டம் | 11.09.2024 முதல் அமுலுக்கு வரும் வகையில், ஊழியர்களின் குறைந்தபட்ச மாத ஊதியத்தை ரூ. 12,500.00 இலிருந்து ரூ. 17,500.00. வரையும் குறைந்தபட்ச தினசரி ஊதியத்தை மேலும் ரூ.500.00 இலிருந்து ரூ. 700.00 வரை அதிகரித்தல். |

### 2.2.5. தொழிலாளர் நியமங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல்

தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் மற்றும் சேவை நிபந்தனைகளை இற்றைப்படுத்தல் மற்றும் அந்த உரிமைகளைப் பாதுகாத்தல் திணைக்களத்தின் முதன்மைப் பணியாகும். அதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை அந்தப் விடயப்பிரிவு தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை** 2.8 - சம்பள சபையில் குறைந்தபட்ச ஊதியங்களின் இற்றைப்படுத்தல்

| **சம்பள சபை** | **குறைந்தபட்ச ஊதியத்தை இற்றைப்படுத்த எடுத்த நடவடிக்கைகள்** |
|---|---|
| தேயிலை வளர்ப்பு மற்றும் பதப்படுத்தும் தொழிற்றுறை | நேரக்கட்டுப்பாட்டு வேலைக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச தினசரி ஊதியம் ரூ. 1350.00 ஆகவும் நிலைபேறான அளவை விட அதிகமாக பறிக்கப்படும் ஒவ்வொரு 01 கிலோகிராம் கொழுந்து தேயிலைக்கும் (Over Kilo Rate) ரூ. 50.00. ஆகவும் தினசரி கொடுப்பனவாக திருத்தம் செய்தல். (இந்த தீர்மானம் 10.09.2024 முதல் அமுலுக்கு வரும்.) |
| ரப்பர் வளர்ப்பு மற்றும் மூல ரப்பர் பதப்படுத்தும் தொழிற்றுறை | நேரக்கட்டுப்பாட்டு வேலைக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச தினசரி ஊதியம் ரூ. 1350.00 ஆகவும அளவை விட அதிகமாகக் கொண்டுவரப்படும் ஒவ்வொரு 01 கிலோகிராம் ரப்பர் பால்; ((Over Kilo Rate)) ரூ. 50.00. ஆகவும் தினசரி கொடுப்பனவாக திருத்தம் செய்தல். (இந்த தீர்மானம் 10.09.2024 முதல் அமுலுக்கு வரும்.) |

**அட்டவணை** 2.9 - 5 நாள் வேலை வாரத்திற்கான அனுமதி பெற்றுக்கொடுத்தல்

| 2024.01.01 முதல் 2024.12.31 வரை | | | 2024.12.31 திகதியன்று அனுமதி வழங்குவதற்கு மேல் நடவடிக்கை எடுக்கப்படும் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **பெறப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை** | **அனுமதி வழங்கிய எண்ணிக்கை** | **நிராகரிப்புகளின் எண்ணிக்கை** | |
| 339 | 320 | (08) | 11 |

**அட்டவணை** 2.10- கூட்டு ஒப்பந்தங்களின் சட்டப்பூர்வ செல்லுபடியாகும் தன்மையை சோதித்துப் பார்த்தல்

| 2024.01.01 **முதல்** 2024.12.31 **வரை** | | | 2024.12.31 **திகதியன்று, சோதனை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| **பெறப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை** | **அனுமதி வழங்கிய எண்ணிக்கை** | **நிராகரிப்புகளின் எண்ணிக்கை** | |
| 39 | 21 | - | 18 |

**அட்டவணை** 2.11 – சம்பள சபை கட்டளைச் சட்டம் மற்றும் கடை மற்றும் அலுவலகப் பணியாளர் சட்டத்தின் கீழ் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்வதற்கான கோரிக்கைகளை அங்கீகரித்தல்.

| 2024.01.01 **திகதியன்று இருப்பு** | 2024.01.01 **முதல்** 2024.12.31 **வரை** | | | 2024.01.01 **திகதியன்று இருப்பு** |
|---|---|---|---|---|
| | **பெறப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை** | **அனுமதிகளின் எண்ணிக்கை** | **நிராகரிப்புகளின் எண்ணிக்கை** | |
| 119 | 262 | 124 | (128) | 129 ((முழுமையற்ற ஆவணங்களைச் சமர்ப்பித்த இந்த 129 நிறுவனங்கள் தொடர்புடைய ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளன) |

**அட்டவணை** 2.12 – கட்டளை சட்டங்கள் தொடர்பாக வேலை வழங்குநர்கள் மற்றும் ஊழியர் தரப்புகளால் செய்யப்படும் விசாரணைகளுக்கு விபரங்கள் மற்றும் விளக்கங்களை வழங்குதல்.

| 2024.01.01 **முதல்** 2024.12.31 **வரை** | | 2024.12.31 **திகதியன்று பதில் தயாரிக்கப்படும் இருப்பு** |
|---|---|---|
| **பெறப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை** | **பதில்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கை** | |
| 70 | 69 | 01 |

### 2.2.6. உழைக்கும் பெண்கள் மற்றும் இள நபர்களின்உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழில்முறையை ஒழித்தல்

வேலைவாய்ப்பில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வண்ணம் தொழிலாளர் சட்டங்களை செயற்படுத்தல், அந்தச் சட்டங்களை அவ்வப்போது மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை பரிந்துரைப்பதன் மூலம் வினைத்திறனாக பெண்கள் நாட்டிற்கு பங்களிப்பதை உறுதி செய்வதோடு இலங்கையில் சிறுவர் தொழில் முறையை ஒழிக்க நடவடிக்கை எடுப்பதில் தொழில் திணைக்களம் ஈடுபடுகின்றது.

அதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை** 2.13 - சிறுவர் தொழில் தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் மேற்கொள்ளல்

| 2024.01.01 திகதியன்று இருப்பு | 2024.01.01 முதல் 2024.12.31 வரை | | 2024.12.31 **திகதியன்று இருப்பு** |
|---|---|---|---|
| | **பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | **தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | |
| 13 | 100 | 101<br>((இவற்றில், சிறுவர் தொழில் தொடர்பான 02 முறைப்பாடுகள் வெளியாகியுள்ளன, மேலும் இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.) | 12 |

- **இரவு வேலைகளில் பெண்களைப் பணியமர்த்துவதற்கான அனுமதி வழங்கல்.**

இரவுப் பணிகளில் பெண்களைப் பணியமர்த்துவதற்கு 751 அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

**அட்டவணை** 2.14 - இரவு வேலையில் பெண்களைப் பணியமர்த்துவது தொடர்பான பணி நிலைமைகளை மீறுவது தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகள் மீதான விசாரணைகள்

| 2024.01.01 **திகதியன்று இருப்பு** | 2024.01.01 **முதல்** 2024.12.31 **வரை** | | 2024.12.31 திகதியன்று இருப்பு |
|---|---|---|---|
| | **பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | **தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | |
| 02 | 07 | 09 | - |

- **இலங்கையில் சிறுவர் தொழில்முறையை ஒழிக்க சமூக பொலிஸ் குழுக்களுடன் இணைந்து பணியாற்றுதல்.**

சிறுவர் தொழில் முறையை ஒழித்தல் மற்றும் பிரசைகள் பொறுப்பு தொடர்பான செய்தியை இலங்கை பொலிஸ் சமூக காவல் குழுக்கள் மூலம் அடிமட்ட மட்டத்திற்கு எடுத்துச் செல்வது மிகவும் நடைமுறைக்கு ஏற்றதாக அடையாளம் காணப்பட்டது. அதன்படி, 2024 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தையும் 2025 ஆம் ஆண்டில் முழு நாட்டையும் உள்ளடக்கிய இந்த தேசியப் பொறுப்பில் இணைந்து நடவடிக்கை எடுக்க தீர்மானம் செய்யப்பட்டது.

இதன் ஆரம்ப கட்டமாக, கொழும்பு மாவட்டத்தில் உள்ள சமூக பொலிஸ் பிரிவுகளுக்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர்கள், அவர்களின் கீழ் இயங்கும் சமூக காவல் பிரிவுகளின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் திணைக்கள தொடர்புடைய பிரதி மற்றும் உதவி ஆணையாளர்களுக்கு பயிற்சியாளர்களுக்கான பயிற்சி அமர்வு நடத்தப்பட்டு இதன் மூலம் அவர்களுக்குத் ஆறிவூட்டல் செய்து, இலங்கை பொலிஸ் சமூக காவல் குழுக்களுடன் இணைந்து,

அனைத்து வகையான சிறுவர் தொழில்களையும இலங்கையில் இருந்து முற்றிலுமாக ஒழிக்கும் செய்தியை அடி மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கை 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டத்தில், கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பொலிஸ்; நிலையத்திலும் உள்ள 52 சமூக பொலிஸ் ஆலோசனைக் குழுக்களுடன் தொழில் திணைக்களத்தின் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் தொடர்புபட்டு பொலிஸ் நிலைய மட்டத்தில் உள்ள அனைத்து ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

மூன்றாம் கட்டமாக, 2025 ஆம் ஆண்டுக்குள் முழு தீவையும் உள்ளடக்கும் வகையில் இந்தப் பொறுப்பை செயற்படுத்துவதற்கான செயன்முறையை விளக்கும் விசேட நிகழ்ச்சி 18.12.2024 அன்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங்கை சமூக பொலிஸ்; மற்றும் சுற்றுச்சூழல் பிரிவின் பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர், நாட்டின் அனைத்து பொலிஸ் பிரிவுகளின் சமூக பொலிஸ் குழு பொறுப்பான அனைத்து பொலிஸ் நிலைய அத்தியட்சகர்கள் அனைத்து பிராந்திய உப தொழில் ஆணையாளர்கள், மாவட்ட உதவி தொழில் ஆணையாளர்கள் மற்றும் தொழில் திணைக்களத்தின் சிரேட்ட தொழில் உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

- **அமைப்புசார் துறைகளில் சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்த மாட்டோம் என்ற உறுதிமொழிகளைப் பெறுதல்.**

ஜூன் 12 ஆம் தேதி வரும் 'உலக சிறுவர் தொழில்எதிர்ப்பு தினத்துடன்" இணைந்து, தொழில் திணைக்களம் 18.06.2024 அன்று ஒரு நினைவு நிகழ்ச்சியை நடத்தியது. அதில், அமைப்புசார் துறையில் உள்ள நிறுவனங்களின் வேலை வழங்குநர்களிடமிருந்து, குறிப்பாக கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் உள்ள கைத்தொழில் பேட்டைகளில் நிறுவப்பட்ட நிறுவனங்களிலிருந்து, அவர்களின் நிறுவனங்கள் சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்தாது என்று உறுதிமொழிகளைப் பெறுவதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது. இதற்கு இணையாக, திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஒரு ஞசு குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டது, மேலும் தீவில் உள்ள அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்த மாட்டோம் என்ற உறுதிமொழியைப் பெறுவதற்கான செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. மேலும், கள ஆய்வுகளை மேற்கொள்ளும் தொழில் அதிகாரிகளால் அமைப்பு முறைசாரா துறைக்கு முன்னுரிமை அளித்து ஏனைய மற்ற அனைத்துத் துறைகளிலும் சிறுவர் தொழிலாளர்களைப் பணியமர்த்த மாட்டோம் என்று வேலை வழங்குநர்களிடமிருந்து உறுதிமொழிகளைப் பெறுவதற்கான முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடத்துதல்**

தொழில் திணைக்களத்தினால் பெண்கள் மற்றும் இளைஞர்களைப் பணியமர்த்துவதற்காக உரிமையை பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழில்முறையை ஒழித்தல் குறித்து அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதோடு, 01/01/2024 முதல் 12/31 வரை நடைபெற்ற அறிவூட்டல் நிகழ்ச்சிகளின் முன்னேற்றம் பின்வருமாறு.

**அட்டவணை** 2.15 - பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவால் நடத்தப்பட்ட அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய தகவல்கள் - 2024.01.01 முதல் 2024.12.31 வரை

| **நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்** | **நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** | **பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை / பயனாளிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| தனியார் துறை ஊழியர்களுக்கான பெண்கள் மற்றும் சிறுவர்;; தொடர்பான தொழிலாளர் சட்டங்கள் குறித்த அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் | 12 | 418 |
| ஆபத்தான சிறுவர் தொழிலாளர் மற்றும் சிறுவர் தொழிலாளர் தொடர்பான சிறப்புக் குழு விசாரணைகளுக்கு இணையாக, மீன்பிடி சமூகத்தில் ஆபத்தான சிறுவர்; தொழிலாளர் மற்றும் சிறுவர் தொழிலாளர் சட்டங்கள் குறித்த அறிவூட்டலை ஏற்படுத்துதல் | 47 | 2176 |
| தேயிலை மற்றும் பெருந்தோட்டப் பயிர்த் துறை மற்றும் கைத்தொழில் துறையில் சிறு மற்றும் நடுத்தர வேலை வழங்குநர்களுக்கு ஆபத்தான சிறுவர் தொழில்மற்றும் சிறுவர்; தொழிலாளர் சட்டங்கள் குறித்த அறிவூட்டல் | 62 | 1532 |
| கொழும்பு மாவட்டத்தில் உள்ள சமூக காவல் பிரிவுகளுக்குப் பொறுப்பான பொறுப்பாளர்கள், அவர்களின் கீழ் இயங்கும் சமூக காவல் பிரிவுகளின் பொறுப்பாளர்கள், தொழில் திணைக்கள தொடர்புடைய பிரதி தொழில் ஆணையாளர்கள் மற்றும் உதவி தொழிலாளர் ஆணையாளர்களுக்கான சிறுவர்; தொழிலாளர் முறையை ஒழித்தல் மற்றும் பிரசைகள் பொறுப்பின் செய்தியை அடிமட்டத்திற்கு எடுத்துச் செல்வது குறித்த விசேட பயிற்சித் திட்டம் | 01 | 142 |
| சமூக பொலிஸ் ஆலோசனைக் குழுக்களுடன் இணைந்து, தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆபத்தான சிறுவர் தொழில்மற்றும் சிறுவர் தொழில்சட்டங்கள் குறித்து ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கு அறிவூட்டல் | 14 | 587 |
| மொத்தம் | **136** | **4855** |

### 2.2.7. **பணியாளரின் தொழில் பாதுகாப்பிற்காக சரியான பணிச்சூழலை உறுதி செய்தல்**.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பௌதிக ரீதியான தீங்கு மற்றும் விபத்துகளைக் குறைப்பது தொழில் திணைக்கள பொறுப்பாகும். இலங்கையில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி சம்பந்தமாக 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கம் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கின்றது. விபத்துகள் இல்லா பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்வதற்காக, திணைக்களம் பிரதானமாக 2024.01.01 முதல் 2024.12.31 வரை பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டது.

| | |
|---|---|
|  | தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் புதிய விதிமுறைகளின் கீழ் 2024.01.01 முதல் 2024.12.31 வரை 2221 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டன. அதன்படி, தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் புதிய விதிமுறைகளின் கீழ் 31.12.2024 திகதியன்று பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 6614 ஆகும். |
|   | 2024.01.01 முதல் 2024.12.31 வரை ஆய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டங்களின் எண்ணிக்கை 244 ஆகும். |
|  | மாவட்ட தொழிற்சாலை ஆய்வுப் பொறியியலாளர்கள் 2024.01.01 முதல் 2024.12.31 வரை 2578 தொழிற்சாலைகளை ஆய்வு செய்துள்ளனர். |
|  | 2024.01.01 முதல் 2024.12.31 வரை பதிவாகி விசாரிக்கப்பட்ட உயிரிழப்பு விபத்துகளின் எண்ணிக்கை 47 ஆகவும், உயிரிழப்பு அல்லாத விபத்துகளின் எண்ணிக்கை 1606 ஆகவும் உள்ளது. |
|  | 2024.01.01 முதல் 2024.12.31 வரை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அதிக ஆபத்துள்ள இயந்திர ஆய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 11,965 ஆகும். |

**அட்டவணை** 2.16 – தொழிற்றுறை பாதுகாப்புப் பிரிவால் நடத்தப்பட்ட பணியாளர் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய தகவல் - 2024.01.01 முதல் 2024.12.31 வரை

| **நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை** | **நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்** | **நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** | **பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை / பயனாளிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| தொழில்சார் பாதுகாப்பை ஊக்குவித்தல் | தொழில்சார் பாதுகாப்பு குறித்த அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் (ஆடைகள், உற்பத்தி, பெருந்தோட்டங்கள், கட்டுமானம் போன்ற துறைகளை உள்ளடக்கியது) | 115 | 5288 |

**ஊழியர் பாதுகாப்பை மேம்படுத்த இரு தரப்பு பாதுகாப்பு குழுக்களை நிறுவுதல்.**

இரு தரப்பு பாதுகாப்பு குழுக்களை நிறுவுவதன் முக்கிய நோக்கம் தொழிற்சாலைகளில் தொழில் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலம் பாதுகாப்பு கலாச்சாரத்திற்கு வழி வகுப்பதாகும்.

2024.01.01 முதல் 2024.12.31 வரையிலான காலகட்டத்தில்இ அனைத்து தொழில்துறை துறைகளையும் உள்ளடக்கிய 202 இருதரப்பு பாதுகாப்புக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. அதன்படி 31.12.2024 நிலவரப்படி நிறுவப்பட்ட இருதரப்பு பாதுகாப்புக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை 877

- **தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்து வேலை வழங்குநர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பதில் பயன்படுத்த பயிற்சி இதவடிவ தொகுதிகளை உருவாக்குதல்.**

கட்டுமானத் துறையில் தொழில் பாதுகாப்பு, மின் பாதுகாப்பு, இயந்திர பாதுகாப்பு மற்றும் இரசாயன பாதுகாப்பு ஆகிய 04 துறைகளில் வேலை வழங்குநர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அறிவூட்ட தனித்தனி பயிற்சி இதவடிவ தொகுதி வரைவுகள் தயாரிக்கப்பட்டன. இதன் எதிர்கால செயற்பாடுகள்; 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2.8. ஊழியர்களின் தொழில்சார் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல்

வேலைத்தளங்களில் பௌதிக நலம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, வேலைத்தளங்களில் ஏதேனும் பௌதிக நலப் பிரச்சினைகள் அல்லது விபத்துகள் ஏற்படுமா என்பதை விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி திணைக்களம் விசாரித்து, அத்தகைய விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை எடுத்து, அவற்றைத் தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவூட்டலை ஏற்படுத்தும். அதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

· சுற்றுச்சூழல் அளவீடுகளின் எண்ணிக்கை - 233

· உயிரியல் சோதனைகளின் எண்ணிக்கை - 236

· தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கணக்காய்வுகளின் எண்ணிக்கை – 241

அட்டவணை 2.17 - தலையீடுகள் மற்றும் சிக்கல் சூழ்நிலைகளின் தீர்வு பற்றிய தகவல்

| **தலையீடுகள் செய்யப்பட்டு சிக்கல் சூழ்நிலைகள் தீர்க்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை** | **செயல்பாட்டின் வெளியீடு** |
|---|---|
| 08 | தொடர்பாக எழுந்த சிக்கலான சூழ்நிலைகளைத் தீர்க்க தேவையான தலையீடுகள் செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் விளைவாக 1752 பேரின் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார உரிமைகள் தொடர்பான நியமங்களை பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. |

**அட்டவணை** 2.18 - தொழில்சார் சுகாதாரப் பிரிவால் நடத்தப்பட்ட பணியாளர் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய தகவல்கள் - 2024.01.01 முதல் 2024.12.31 வரை

| **நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை** | **நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்** | **நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** | **பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை /பயனாளிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| தொழில்சார் சுகாதார மேம்பாடு | வேலை வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களுக்காக ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 92 | 1101 |
| | நிறுவனங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளைத் தொடர்ந்து, வேலை வழங்குநர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நடத்தப்பட்ட நிறுவனங்களுக்குள் களப் பயிற்சி (On the spot field trainings) நிகழ்ச்சித் திட்டங்கள். | 173 | 2832 |

மேலும், மேற்கு மாகாணத்தில் உள்ள சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களின் பணிச்சூழல் நிலைமைகளை (சத்தம், ஒளி, வெப்பம், காற்றோட்டம் போன்றவை) நியம நிலைபேறான நிலைமைகளுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு திட்டம் 2024 இல் தொடங்கப்பட்டது. அதன்படி, மேற்கு மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்வரும் கைத்தொழில் பேட்டைகளில் இந்த நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

- கொழும்பு மாவட்டம் - கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பனலுவ கைத்தொழில் பேட்டை மற்றும் பனாகொட Templeburg கைத்தொழில் பேட்டை
- கம்பஹா மாவட்டம் - கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஏக்கல கைத்தொழில் பேட்டை
- களுத்துறை மாவட்டம் - நாகொட Fulerton கைத்தொழில் பேட்டை, ஹொரண வவுலாகல கைத்தொழில் பேட்டை மற்றும் ஹொரண அரமனகொல்ல கைத்தொழில் பேட்டை

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப கணக்கெடுப்பு நடவடிக்கைகளின் போது, தொழிற்சாலைகளில் உள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை, உற்பத்தி, மூலப்பொருட்கள், வேலை நேரம், ஊழியர் நல வசதிகள் மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகள் (ஒளி அளவு, இரைச்சல் அளவு, வெப்பவியக்கம் (Wet Bulb Globe Temperature – WBGT) போன்றவை) பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன. மேலும், சுற்றுச்சூழல் நிலைமைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட அளவீடுகளின் அடிப்படையில் நிலைபேறான நிலைகளிலிருந்து விலகல்களைக் கண்டறிந்து பணி சுற்றுச்சூழல் நிலைமைகளை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து வேலை வழங்குநர்கள் மற்றும் ஊழியர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதோடு பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

### 2.2.9. தகவல் மற்றும் தொடர்பு நடவடிக்கைகள்

- **திணைக்களத்தின் வலைத்தளம் மற்றும் திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக நடவடிக்கைகள்**

I. தொழில் திணைக்களத்தின புதிய அதிகாரப்பூர்வ வலைத்தளம் ((www.labourdept.gov.lk)18.06.2024 அன்று தொடங்கப்பட்டது. விண்ணப்பப் படிவங்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்குத் தேவையான தொழில் கட்டளைகள், அத்துடன் வேலை வழங்குநர்கள் பின்பற்ற வேண்டிய சம்பள நிர்ணய சபை முடிவுகள் உள்ளிட்ட தேவையான ஆவணங்கள் இந்த வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்வதற்காக வெளியிடப்படுகின்றன என்பதோடு தகவல்கள் தொடர்ந்து




இற்றைப்படுத்தப்படுகின்றன. மேலும், திணைக்களத்தின மின்னணு சேவை (e-Service) அணுகல் வசதிகள் சேர்க்கப்பட்டு மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தத் திணைக்களத்தால் அதிகாரப்பூர்வ யூடியூப் சேனல், பேஸ்புக் பக்கம் மற்றும் ட்விட்டர் கணக்கைப் பேணுவது மூலம் பொதுமக்களுக்கு புதுப்பிக்கப்பட்ட தகவல்களை வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது

| | |
|---|---|
| YouTube Channel | Subscribers: 1.87K<br>Number of Videos included : 130 |
| Facebook Page | Followers: 1.5K |
| Twitter | Followers: 105 |

- **தொழில் திணைக்களத்தின நூலகம்**

தொழில் துறை தொடர்பான சட்டங்கள், புத்தகங்கள் மற்றும் வெளியீடுகளைக் கொண்ட இலங்கையின் மிகப்பெரிய நூலகத்தை தொழில் திணைக்களம் கொண்டு நடத்துகின்றது. இது தொழில் திணைக்களம், தொழில் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள பிற நிறுவனங்களின் ஊழியர்களுக்கும், வெளிப்புற வாசகர்களுக்கும் தொழில் சட்டத் துறை தொடர்பான அனைத்து சட்டங்கள், புத்தகங்கள், வெளியீடுகள் போன்றவற்றை வாசிக்க வசதி வழங்குகின்றது.

நூலகத்தின் வசதிகளை மேலும் மேம்படுத்த, நூலக தரவு முகாமைத்துவ அமைப்பை (KOHA மென்பொருள்) நிறுவுவது 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.




- **வெளியீட்டு நடவடிக்கைகள்**

**கதிகாவா சஞ்சிகை**

நிறுவனங்களுக்குள் வேலை வழங்குநர்கள் மற்றும் ஊழியர்களிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான அறிவை வழங்குவதன் மூலம் சர்ச்சைகளைக் குறைப்பதற்கு

பங்களிப்பதே இந்தப் சஞ்சிகையை; தொடங்கியதன் நோக்கமாகும். அதன்படி, கதிகாவா இதழின் 23வது தொகுதி டிசம்பர் 2024 இல் தொடங்கப்பட்டது

தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் தொழிற் சட்டங்கள் தொடர்பில் பொதுமக்களிடையே அறிவை அதிகரிக்க AI Chatbot ஐ உருவாக்குதல் மற்றும் தொழில் சட்டங்கள் தொடர்பான அதிகாரிகளின் அறிவை அதிகரிக்க சுய கற்றல் இதவடிவ தொகுதியை Self Learning Module உருவாக்க சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் 2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன,




### 2.2.10. தொழில் திணைக்களம் தொடர்பான கணக்கெடுப்புகள் மற்றும் கற்கைகள்

- **வேலை நேரம் மற்றும் தொழில் செலவுகள் பற்றிய கணக்கெடுப்பு**

இந்த கணக்கெடுப்பு மூலம் நாட்டின் அபிவிருத்தி உத்திகளை வகுக்கத் தேவையான தொழில் செலவுகள், வேலை செய்யும் நேரம் மற்றும் சராசரி வருமானம் பற்றிய தரவுகளைச் சேகரிக்கும். இதன் மூலம் அரசு மற்றும் தனியார் துறைகளில் திட்டமிடல் மற்றும் முடிவெடுப்பதற்காகவும் வேலை வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் இருவரின் முன்னேற்றத்திற்கும் தயாரிக்கப்படும் எதிர்கால திட்டங்கள் தீட்டுவதற்கு தேவையான தகவல்களை வழங்கும்.

வேலை செய்த மணி நேரம் மற்றும் தொழிலாளர் செலவு தொடர்பான கணக்கெடுப்பு 2023 ஆண்டுக்குரிய தரவுகளை கணினிமயமாக்கும் பணி நடந்து வருகிறது. மேலும், 2024 ஆம் ஆண்டு தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக, தொடர்புடைய நிறுவனங்களுக்கு வினாக்கொத்துக்கள்; அஞ்சல் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

- **Annual Survey of Private and Semi-Government Sector Employment - 2022**

- **வேலை நேரம் மற்றும் தொழில் செலவுகள் பற்றிய கணக்கெடுப்பு**




• இந்த கணக்கெடுப்பு மூலம் நாட்டின் அபிவிருத்தி உத்திகளை வகுக்கத் தேவையான தொழில் செலவுகள், வேலை செய்யும் நேரம் மற்றும் சராசரி வருமானம் பற்றிய தரவுகளைச் சேகரிக்கும். இதன் மூலம் அரசு மற்றும் தனியார் துறைகளில் திட்டமிடல் மற்றும் முடிவெடுப்பதற்காகவும் வேலை வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் இருவரின் முன்னேற்றத்திற்கும் தயாரிக்கப்படும் எதிர்கால திட்டங்கள் தீட்டுவதற்கு தேவையான தகவல்களை வழங்கும்.

- வேலை செய்த மணி நேரம் மற்றும் தொழிலாளர் செலவு தொடர்பான கணக்கெடுப்பு 2023 ஆண்டுக்குரிய தரவுகளை கணினிமயமாக்கும் பணி நடந்து வருகிறது. மேலும், 2024 ஆம் ஆண்டு தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக, தொடர்புடைய நிறுவனங்களுக்கு வினாக்கொத்துக்கள் அஞ்சல் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

- **சிறுவர் தொழில்ஆய்வு 2024 - கொழும்பு மாவட்டம்**

கொழும்பு மாவட்டத்தில் சிறுவர் தொழில் பற்றிய விளக்கத்தைப் பெற, சிறுவர் தொழில்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்து, சிறுவர் தொழிலாளர்களை அடையாளம் காணவும். குடும்பங்களின் சமூக-

பொருளாதார நிலை குறித்த தரவுகளைச் சேகரித்து, சிறுவர் தொழில் முறையை ஒழிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யும் நோக்கில் 2024 ஆம் ஆண்டு சிறுவர் தொழில் குறித்த ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த ஆய்வுக்காக, கொழும்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்குமாறு 100 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து 1000 வீட்டு அலகுகளின் மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்காக, எளிய எழுந்தமான மாதிரி முறை மற்றும் அடுக்கு மாதிரி முறை இரண்டும் பயன்படுத்தப்பட்டன, மேலும் தரவுகளைச் சேகரிக்க வீட்டு கணக்கெடுப்பு முறை மற்றும் விரைவான மதிப்பீட்டு முறை பயன்படுத்தப்பட்டன. தரவு சேகரிப்புக்குப் பிறகு, ஆய்வு முடிவுகள் சிறுவர் தொழில்ஒழிப்புக்கான தேசிய வழிகாட்டுதல் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு, “சிறுவர் தொழில்ஆய்வு 2024 - கொழும்பு மாவட்டம்” என்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டது.




**· தேயிலை தொழிற்சாலைகள், இலங்கை முதலீட்டு சபையின் கீழ் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் ரப்பர் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு இணங்குவதில் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்வின் தாக்கம் குறித்த ஆய்வு**.

இந்த ஆய்வு மூலம் தொழிற்சாலை பதிவில் உள்ள பலவீனங்கள், விபத்துகள் பற்றிய தகவல்களைப் பதிவு செய்யப் பயன்படுத்தப்படும் பொதுப் பதிவேட்டைப் ((General Registry)) பராமரிப்பதில் உள்ள பலவீனங்கள் மற்றும் முதலுதவி வசதிகளில் உள்ள பலவீனங்கள் போன்ற தொழிற்சாலைகளில் உள்ள பலவீனங்களை அடையாளம் கண்டுள்ளது. அதன்படி, இந்த ஆய்வு அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில், எதிர்காலத்தில் தொழிற்சாலைகளில் ஏற்படும் பலவீனங்களைக் குறைத்து, 2025 ஆம் ஆண்டு முதல் அவற்றை செயல்படுத்த, எதிர்கால நடவடிக்கைகளுக்கான செயல் திட்டத்தைத் தயாரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

**· 2020 முதல் 2024 வரை தொழில் திணைக்களத்தின் தொழிற்றுறை உறவுகள் பிரிவால் பெறப்பட்ட தொழிற்றுறை பிணக்குகள பற்றிய ஆய்வு**

இந்த ஆய்வு, 2020 – 2024 காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்து சபை, தேசிய வீட்டுவசதி அபிவிருத்தி அதிகாரசபை , லங்கா சதோசா லிமிடெட், இலங்கை மகாவலி அதிகாரசபை போன்ற பகுதியளவிளான அரசத்துறை நிறுவனங்கள் தொடர்பாக திணைக்களத்தால் பெறப்பட்ட 124 தொழிற்றுறை பிணக்கு கோப்புகளை கற்கை செய்தது. அங்கு அடையாளம் காணப்பட்ட தொழிற்றுறை பிணக்குகளுக்கான பிரதான காரணங்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நிர்வாக நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளைக் கொண்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான பணிகளும் நடந்து வருகின்றன.

**· இலங்கையில் குறைந்தபட்ச ஊதியத்திற்கும் பெயரளவு ஊதியத்திற்கும் இடையிலான இடைவெளியின் பகுப்பாய்வு**.

தொழில் நியமங்கள்; பிரிவு மற்றும் புள்ளிவிவரப் பிரிவு இணைந்து நடத்திய இந்த ஆய்வு மூலம் தேசிய குறைந்தபட்ச ஊதியத்தை (மாதாந்தம்) குறைந்தபட்சம் ரூ. 24,120.00 ஆக இருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன்படி, தனியார் துறையில் எதிர்கால சம்பள திருத்தங்களில் மாற்றங்களைச் செய்வதற்கு இந்தப் பரிந்துரைகளைப் பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

### 2.2.11. பிரதான கொண்டாட்ட நிகழ்ச்சிகள்

**· சர்வதேச மகளிர் தின கொண்டாட்ட நிகழ்ச்சி** 2024

மார்ச் 8 ஆம் தேதி வரும் சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்து தொழிற் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட

மகளிர் தின கொண்டாட்ட நிகழ்ச்சி, மார்ச் 7, 2024 அன்று தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. "பெண்களைப் பாதிக்கும் தொழில் சட்டங்கள்" குறித்து சமூக ஊடகங்கள் மூலம் சமூகத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அன்றைய தினம் ஒரு குறுகிய காணொளி படைப்புப் போட்டி நடத்தப்பட்டு, போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பெண்களைப் பாதிக்கும் தொழில் சட்டங்கள் குறித்து பல்கலைக்கழக மாணவர்களுக்கான திறந்த கலந்துரையாடல் மன்றமும் நடைபெற்றது. இதற்கு சிரம வாசனா நிதியும் பங்களித்தது.

· **உலக சிறுவர் தொழில்எதிர்ப்பு தினம் - 2024**

2025 ஆம் ஆண்டுக்குள் இலங்கையில் சிறுவர் தொழில்முறையை ஒழிக்கும் திட்டத்தின் கீழ், ஜூன் 12 ஆம் தேதி வரும் "உலக சிறுவர் தொழில் எதிர்ப்பு தினத்துடன்" இணைந்து தொழில் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி, தொழில் செயலகத்தின் 10வது மாடி கேட்போர்கூடத்தில்; 18.06.2024 அன்று நடைபெற்றது.

அந்த நேரத்தில், சிறுவர் தொழில்முறையை ஒழிப்பதை ஊக்குவிப்பதற்காக தொழில் திணைக்களத்துக்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது, அத்தோடு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் இயங்கும் கைத்தொழில் பேட்டைகளில் அமைந்துள்ள 61 நிறுவனங்களின் வேலை வழங்குநர்களும் தங்கள் நிறுவனங்களை சிறுவர் தொழில்இல்லாத நிலையில் நடத்துவதாக உறுதியளித்தனர். மேலும், சிறுவர் தொழில்முறையை ஒழிப்பது குறித்து முறையான துறைசார் நிறுவனங்களிடமிருந்து உறுதிமொழிகளைப் பெறுவதற்காக தொழில் திணைக்களத்தின் புதிய இணையதளத்தில் ஒரு QR குறியீட்டை இந்த திட்டம் அறிமுகப்படுத்தியது.

· **தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம்**

தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்துடன் இணைந்து தொழில்சார் சுகாதாரம் மற்றும் சுகாதாரம் குறித்த மூன்று பயிற்சி செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

**அட்டவணை** 2.19 - தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்திற்காக நடத்தப்பட்ட பயிற்சி செயலமர்வுகள் பற்றிய தகவல்கள்

| பயிற்சி செயலமர்வுகள் நடைபெற்ற திகதி | பயிற்சி செயலமர்வுகள் நடைபெற்ற இடம் | பங்கேற்ற ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2024.10.23 | பனலுவாவில் உள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கைத்தொழில் குடியிருப்பு | 35 |
| 2024.10.29 | ஹொரண அரமனகொல்ல கைத்தொழில் பேட்டை | 45 |
| 2024.10.25 | வவுனியா பிரதேச செயலகம் (தமிழ் மொழியில்) | 33 |

## 2.2.12. மனித வள முகாமைத்துவம்

· திணைக்களத்தின் ஊழியர் தேவைகளை அடையாளம் காணுதல், தேவைக்கேற்ப ஆட்சேர்ப்பு செய்தல், அதிகாரிகளை பதவி உயர்வு செய்தல், வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைகளை நடத்துதல், செயலாற்றுகை த்தை மதிப்பீடு செய்தல், சம்பள உயர்வுகளை வழங்குதல், இடமாற்றங்கள், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள், அதிகாரிகளுக்கான விடுப்பு ஏற்பாடுகள் மற்றும் ஊழியர்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள் போன்ற அன்றாட ஊழியர் நிர்வாக நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டில், மேற்கொள்ளப்பட்டன.

· தொழில் உத்தியோகத்தர் தரம் II க்கு 57 புதிய உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 57 தொழில் உத்தியோகத்தர்கள் 2024.05.08 முதல் 2024.09.06 வரை தங்கள் சேவையைத் தொடங்குவார்கள். பயிற்சிக்குப் பிறகு, அவர்கள் 09.09.2024 அன்று

திணைக்களத்தின்; பிராந்திய அலுவலகங்கள் மற்றும் பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டார்கள்.

· 2024 ஆம் ஆண்டில் உதவி தொழிலாளர் ஆணையாளர், தொழில் உத்தியோகத்தர் - தரம் II, மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் - தரம் II, அலுவலக ஊழியர் சேவை - தரம் III, மற்றும் I, ஒருங்கிணைந்த சாரதி சேவை - தரம் II, தச்சர் - தரம் II ஆகிய பதவிகளுக்கு வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைகள் நடத்தப்பட்டன. இதன் கீழ், 58 உத்தியோகத்தர்கள் பரீட்சைகளில் பங்கேற்றனர்.

· அலுவலக ஊழியர் சேவை - தரம் III க்கு நேர்முகத் தேர்வு மூலம் 09 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டனர்.

· மேலும், திணைக்களத்தின் முழு ஊழியர்களின் பயிற்சித் தேவைகளையும்; அடையாளம் கண்டு உள்ளக பயிற்சித் திட்டங்களை ஒழுங்கமைத்து நடத்தியமை, வெளியக நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சி கற்கைகளுக்கு அதிகாரிகளை ஈடுபடுத்தியமை, சேவைத் தேவைக்கேற்ப இளமாணி மற்றும் முதுமாணி பட்டப்படிப்புகளைத் தொடர அதிகாரிகளுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்கியமை மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிக்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டமை திணக்களத்தால் செயற்படுத்தப்பட்டது.

· உள்நாட்டு பயிற்சி திட்டங்களுக்கு 2024 ஆம் ஆண்டிற்கு ரூ.10,400,000.00 ஒதுக்கீடு; பெறப்பட்டது. அதில், 31.12.2024 திகதியன்று செலவு ரூ. 8,546,920.00 மற்றும் ஒதுக்கீட்டின் சதவீதமாக செலவு 82% ஆகும்.

மேலும், சேவைத் தேவைக்கேற்ப முதுமாணி, பட்டம், டிப்ளோமா மற்றும் செயலமர்வுகளுக்கு திணைக்களம் மூலம் இருபது உத்தியோகத்தவர்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளது.

· பிராந்திய தொழில் அலுவலக ஊழியர்களுக்கான செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமை (Performance Evaluation System) மற்றும் நிதி சாராத வெகுமதி முறைமை (Non Financial Rewarding System) ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திடமிருந்து (SLIDA) தொழில்நுட்ப உதவியைப் பெற கோரிக்கை விடுக்கப்பட்டு வழங்கப்பட்ட திட்டத்தின்படி 2025 ஆம் ஆண்டில் மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

· மேலும், சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியைப் பெற்று தொழில் திணைக்களத்தின் சேவை வழங்கலுக்கான அதிகாரிகளுக்கான நெறிமுறைக் கோவையை Code of Ethics for officers for service delivery of the Department of Labour தயாரிக்க கோரிக்கை விடுக்கப்பட்டதோடு அதன் எதிர்காலப் செயற்பாடுகள் 2025 இல் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

· தொழில் திணைக்களத்தின்; துறைகளுக்கான பயிற்சி இதவடிவ தொகுதிகளை ((Training Modules)) உருவாக்கும் பணி 2024 இல் தொடங்கப்பட்டது. 2025 இல் ஒரு குழு மூலம் இந்த வரைவு பயிற்சி இதவடிவ தொகுதிகளை மிகவும் உகந்த வண்ணம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2.13. உட்கட்டமைப்பு அபிவிருத்தி

நாடு முழுவதும் பரந்து விரிந்துள்ள வாடிக்கையாளர்களுக்கு மிகவும் பயனுள்ள சேவைகளை வழங்கும் நோக்கில், திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் நாடு முழுவதும் அமைந்துள்ள பிராந்திய அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.
அதன்படி, பிராந்திய அலுவலகங்களில் தேவைக்கேற்ப சிறிய பழுதுபார்ப்புகளும், மெஹெவர பியச கட்டிடம் மற்றும் தொழில் தலைமைச் செயலக கட்டிடத்தில் உட்கட்டமைப்பு பழுதுபார்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி, 31.12.2024 திகதியன்று, மெஹெவர பியச கட்டிடத்தின் 16வது மாடியில் உள்ளக கட்டமைப்புகளைத் தயாரிப்பதற்கான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன, அதே நேரத்தில் தொழிலாளர் கட்டிடத்தின் 3வது, 4வது மற்றும் 5வது தளங்களில் உள்ளக கட்டமைப்புகளைத் தயாரிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

மேலும், தொழில் செயலக கட்டிடத்தின் முதல் தளத்தில் ஒரு புதிய அலுவலக வளாகம் 06.08.2024 அன்று திறக்கப்பட்டது, இதன் மூலம் பயனாளிகளுக்கு ஊழியர்

சேமலாப நிதி தொடர்பான சேவைகளை ஒரே இடத்தில் வழங்க முடியும்.

### 2.2.14. செயற்பாடுகள் மேற்பார்வை

2024 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் வருடாந்த செயல் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதை நோக்கி திணைக்கள பிரிவுகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதும், அதன் முன்னேற்றமும் ஆராயப்பட்டது. அதன்படி, தொழில் ஆணையாளர் நாயகத்தின் தலைமையில் நடைபெற்ற மூத்த பதவிநிலை அதிகாரிகளின் கூட்டத்தின் மூலம், ஒவ்வொரு பிரிவின் முன்னேற்றம் மற்றும் பிரிவின் செயற்பாடுகளை நடத்துவதில் எழுந்துள்ள நிர்வாக சிக்கல்கள் குறித்து ஆலோசனை மற்றும் தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பிராந்தியங்களுக்குப் பொறுப்பான பிரதி தொழில் ஆணையாளர்கள் மூலம் தங்கள் பிராந்தியங்களுடன் தொடர்புடைய மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களில் 2024 ஆம் ஆண்டின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக, முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்த தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

பிராந்திய பிரதி தொழில் ஆணையாளர்களால் மாவட்ட தொழில்அலுவலகங்கள் மற்றும் உப தொழில் அலுவலகங்களின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்வதற்கான வழிமுறையை தயாரிப்பதற்காக் திணைக்கள அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு பரிந்துரைகள் பெறப்பட்டன. அதன்படி, வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் முன்னேற்ற மேற்பார்வை 2025 இல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், தலைமை அலுவலகம் மூலம் பிராந்திய அலுவலகங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான முறையான வழிமுறையை தயாரிப்பதற்காக, திணைக்கள அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டதோடு 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் குழுவால் கலந்துரையாடல்கள்; நடத்தப்பட்டு வருவதோடு குழுவின் பரிந்துரைகளின்படி 2025 ஆம் ஆண்டில் மேலும் நடவடிக்கைகளை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2.15. நிதி முன்னேற்றம்

2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி, அரசாங்க கொள்கைகளுக்கு இணங்க, தொடர்புடைய நோக்கங்களை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் அடையத் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

அதன்படி, 31.12.2024 திகதியன்று, மீண்டெழு செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் 99.51% சதவீதம் மற்றும் மூலதன செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் 22.52%சதவீதம் இதற்காக பயன்படுத்தப்பட்டு நிதி முகாமைத்துவ இலக்குகளை அடைய பெற்றுள்ளது.

**அட்டவணை 2.20** - 31.12.2024 திகதியன்று மீண்டெழு மற்றும் மூலதனச் செலவுகள்

| | 2024 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு (ரூ.) | மேலதிக ஒதுக்கீடு ரசீதுகள் ரூ. | 31.12.2024 திகதியன்று செலவு (ரூ.) | ஒதுக்கீடுகள் வருவாயின் சதவீதமாக உண்மையான செலவு |
|---|---|---|---|---|
| மீண்டெழு செலவுகள் | 2,895,981,140 | 127,000,000 | 3,008,102,293 | 99.51 % |
| மூலதனச் செலவு | 1,396,000,000 | 7,925,000 | 316,149,882 | 22.52 % |

மூலதனச் செலவின் கீழ் ஐம்பது கட்டிடப் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருந்தாலும், தொழில் திணைக்களத்தில் நிலவும் தொழில்நுட்பப் செயற்பாடுகள் தொடர்பான பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகளின் பற்றாக்குறை, அந்தப் பணிகளை வெளி நிறுவனங்களால் மேற்கொள்ள வேண்டியிருந்தமை, அந்த நிறுவனங்களால் பிரமாண பத்திரங்களையும் மற்றும் விலைமனு கோரலுக்கான ஆவணங்களையும் தயாரிப்பதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் கட்டிடப் பழுதுபார்ப்பு தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க தாமதம் காரணமாக 2024 ஆம் ஆண்டில் மூலதனச் செலவு ஒதுக்கீடுகளைச் செலவிடுவதில் முன்னேற்றம் குறைவாக நிகழ்ந்தது..

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக, 2025 ஆம் ஆண்டில் பரிந்துரைக்கப்பட்ட பெறுகை செயற்முறையைப் பின்பற்றி, பொருத்தமான ஆலோசனை நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்து, இந்த நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனான முறையில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.3. மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

### 2.3.1. வருடத்துள் தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல்.

**· 9 ஆம் தர பாடசாலை மாணவர்களுக்கு அறிவூட்டல்**

பல நுண்ணறிவுத் பரீட்சை அடிப்படையில் பிள்ளையின் அறிவுசார் திறன்கள் மற்றும் எதிர்கால இலக்குகளை அடையாளம் கண்டு, மிகவும் பொருத்தமான விடயப் பிரிவுகளைத் தேர்ந்தெடுத்து, அதன் மூலம் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்கு துல்லியமான வழிகாட்டுதலை வழங்கும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

2024.01.01 முதல் 2024.12.31 வரை, 57,778 பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு நாடு முழுவதும் 1,572 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**· க.பொ.த. (சாதாரண தர) பாடசாலை மாணவர்களுக்கு அறிவூட்டல்**

மாணவர்கள் தங்கள் திறன்கள் மற்றும் ஆர்வங்களுக்கு ஏற்ப உயர்தரப் பாடத்தைத் தெரிவுசெய்ய உதவுதல், எதிர்காலத் தொழில் இலக்குகளை அடையாளம் காணுதல் மற்றும் மாற்றுக் கல்வி அல்லது மாற்றுத் தொழில் தேவைகள் குறித்த வழிகாட்டுதலை வழங்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்தப் பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது. இதன் கீழ், 2024.01.01 முதல் 2024.12.31 வரை 71,477 பாடசாலை மாணவர்களுக்கு நாடு முழுவதும் 2,174 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**· உயர்தர மாணவர்களுக்கு அறிவூட்டல்**

மிகவும் போட்டி நிறைந்த கல்வி முறைக்கு ஏற்ப தங்களை இணைத்துக் கொள்ளும் பாடசாலை மாணவர்களுக்கு தங்களைப் பற்றிய சுய மதிப்பீட்டை உருவாக்;கி அவர்களின் வாழ்க்கை இலக்குகளைத் திட்டமிட தலையீடு அல்லது ஆளுமை மேம்பாடு மூலம் எதிர்கால வேலை உலகில் நுழைய தேவையான மன வலிமையை வளர்த்துக் கொள்ள தேவையான வழிகாட்டுதல் வழங்கும் நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

இது சுய மதிப்பீடு மற்றும் தனிப்பட்ட அடையாளம், வாழ்க்கை இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் உயர்கல்வி, தொழிற்பயிற்சி படிப்புகள் மற்றும் பாடசாலைக்குப் பிறகு வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பற்றிய புரிதலை வழங்குகிறது.

2024.01.01 முதல் 2024.12.31 வரை, 51,335 பாடசாலை மாணவர்களுக்கு நாடு 2024.01.01 முதல் 2024.12.31 வரை, 51,335 பாடசாலை மாணவர்களுக்கு நாடு முழுவதும் 1,381 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, பயிற்சிக்கான 19,927; பேர் பரிந்துரைக்கப்பட்டு, 55,264 பேருக்கு நேரடி தொழில் வழிகாட்டுதல் அமர்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

### 2.3.2. தொழில் உருவாக்கம், ஊக்குவிப்பு மற்றும் பொது வேலைவாய்ப்பு சேவை நிகழ்ச்சித் திட்டங்கள்

அட்டவணை 2.21 - வேலைவாய்ப்பு உருவாக்கம், ஊக்குவிப்பு மற்றும் பொது வேலைவாய்ப்பு சேவை திட்டங்களை செயல்படுத்துவதில் முன்னேற்றம் - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்.

| செயல்பாடு | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| வேலை தேடுபவர்களின் பதிவு | 74,451 |
| வேலை வெற்றிட பதிவு | 54,194 |
| வேலை தேடுபவர்களை வேலைகளுக்கு பரிந்துரைத்தல் | 67,515 |
| வேலை தேடுபவர்களை வேலையில் ஈடுபடுத்தல் | 11,520 |
| முயற்சியாண்மையாளர் மற்றும் சுயதொழில் செய்பவர்களை உருவாக்குதல் | 523 |

**அட்டவணை** 2.22 - மாவட்ட வேலை சந்தை மற்றும் பிராந்திய வேலை சந்தைகளை நடத்துவதில் முன்னேற்றம் - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்.

| நிகழ்ச்சித் திட்டம் | முன்மொழியப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் சந்தைகள் | 25 | 25 | 7,412 |
| பிராந்திய வேலை கண்காட்சிகள் மற்றும் தொழில் சந்தைகள் | 100 | 133 | 15,442 |

### 2.3.3. தொழில் சந்தை தகவல் மற்றும் ஆராய்ச்சி திட்டங்கள்

**· இலங்கையில் பசுமை வேலை வாய்ப்புகள் மற்றும் வேலை விவரங்கள்**

இலங்கையின் பொதுவான வலுசக்தி மூலங்களான சூரிய சக்தி, காற்று, கடல் அலை மற்றும் உயிரி எரிபொருள்களின் நிலைபேறான அபிவிருத்தி, பசுமை வேலைவாய்ப்பு உருவாக்கும் போக்கை அதிகரிக்கும். முன்மொழியப்பட்ட பசுமைப் பொருளாதாரத்தை ஆதரிக்கும் பசுமை வேலை வாய்ப்புகள் மற்றும் வேலை விவரங்கள் குறித்து ஒரு கருப்பொருள் ஆய்வை நடத்த எங்கள் திணைக்களம் முடிவு செய்துள்ளது. இதற்காக, உலகப் பொருளாதாரப் போக்குகளில் எதிர்பார்க்கப்படும் போக்குகள் மீதும் பிரதான கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின்

பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள கூறுகளை அடையாளம் காண்பது, இலங்கை தொழில் சந்தை மற்றும் எதிர்காலத்தில் பசுமை வேலைகள் உருவாக்கக்கூடிய துறைகளில் பசுமை வேலைகளை அடையாளம் காண்பது, பசுமை வேலைகளுக்குத் தேவையான தகுதிகள் மற்றும் திறன்களை அடையாளம் காண்பது மற்றும் நிறுவன மட்டத்தில் பெறப்பட்ட அனுகூலங்களை (சம்பளம், தொழில் முன்னேற்றம், முதலியன) அடையாளம் காண அடிப்படை தரவுகளை சேகரிப்பது ஆகும்.

இந்த ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்படும் தகவல்கள், எங்கள் திணைக்களத்தின் கள அலுவலர்கள் மூலம் ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், வேலை தேடுபவர்கள், தொழில் ஆலோசகர்கள், குறு மற்றும் சிறு முயற்சியாண்மையாளர், பெற்றோர்கள் மற்றும் பொது சமூகத்திற்கு அறிவூட்ட பயன்படுத்தப்படும்.

பசுமை வேலை வாய்ப்புகளைக் கொண்ட 30 நிறுவனங்களின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, தரவு சேகரிப்பு மற்றும் தரவு பகுப்பாய்வு முடிக்கப்பட்டு, அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சி பேராசிரியர் சுனில் சந்திரசிறியின் மேற்பார்வையின் கீழ் நடத்தப்பட்டது.

· சிறு மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாண்மை வேலைவாய்ப்பு சுனிசி சீரிய நடைமுறைகளின் அளவுகோல்களுடன் இணங்குவது குறித்த ஆய்வு.

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் தனியார் துறையில் 'சுசினி' சீரிய நடைமுறைகளின் அளவுகோல்களை செயற்படுத்துவது குறித்து ஆராய்ந்து வருகிறது. இதன்போது பிரதானமாக கவனத்துக்குட்படாத நிலவும் சிறு மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏனென்றால், இலங்கையில் சுமார் 58% வேலைவாய்ப்பு முறைசாரா துறையைச் சேர்ந்தது. அந்தத் துறைக்குள், சுதந்திரம் ((Freedom), சமத்துவம் ((Equity)), பாதுகாப்பு(Security) மற்றும் மனித கண்ணியம் (Human dignity) ஆகிய குணங்களைப் பற்றிய ஆய்வினால் இங்கு பரவலாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. இதன் கீழ், 'சுசினி' சீரிய நடைமுறை மற்றும் அதன் கூறுகள் பற்றிய பொதுவான விழிப்புணர்வு, நடைமுறையில் உள்ள 'சுசினி' சீரிய நடைமுறை எண்ணக்கருக்கள் எண்ணிக்கை மற்றும் முறைசாரா துறையில் அந்தக் எண்ணக்கருக்கள் எந்த அளவிற்கு செயல்படுத்தப்படுகின்றன என்பது விரிவாக ஆய்வு செய்யப்படுகிறது.

இந்த ஆய்வு ஒரு பல்கலைக்கழகத்தில் ஒரு தொழில்முறை ஆராய்ச்சிக் குழுவால் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், கேள்விமனுதாரர்கள் இல்லாததால், திணைக்கள அதிகாரிகளால் தரவு சேகரிக்கப்பட்டது. பேராசிரியர் சுனில் சந்திரசிறியின் மேற்பார்வையின் கீழ் இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டது, மேலும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

· **இலங்கையில் மாற்றுத்திறனாளி சமூகத்தின் வேலைவாய்ப்புத் தகுதி குறித்த ஆய்வு**.

இலங்கையின் சுமார் 20.3 மில்லியன் மக்கள் தொகையில் சுமார் 10% பேர் ஏதேனும் ஒரு வகையான ஊனத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் தங்கள் இயலாமையின் தன்மையின் அடிப்படையில் வேறுபடுகிறார்கள், மேலும் அவர்களில் வேலையில் சேர்க்கக்கூடிய சதவீதத்தினரை அடையாளம் காண முடியும். அவர்களை வேலைக்கு அமர்த்த முடிந்தால், அவர்களைப் பராமரிப்பதற்கான செலவைக் குறைக்க முடியும், மேலும் அவர்கள் தேசிய உற்பத்திக்கு பங்களிக்க முடியும். தேசிய பொருளாதாரம் மாற்றுத்திறனாளிகளைப் பராமரிப்பதற்கான செலவுகளையும் குறைக்க முடியும்.
எனவே, இந்த முன்னோடி ஆய்வு கம்பஹா மாவட்டத்தின் எழுந்தமான மாதிரியைத் தேர்ந்தெடுத்து ஒரு கணக்கெடுப்பை நடத்தி, மாற்றுத்திறனாளி சமூகத்தின் அடிப்படையில் வேலைவாய்ப்பு, வேலைவாய்ப்புக்கான பொருத்தம் மற்றும் பயிற்சித் தேவைகள் குறித்த தகவல்களைப் பெற்று அறிக்கை இடும். இந்த ஆய்வு திணைக்கள அதிகாரிகளால் நடத்தப்பட்டதோடு கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

· **செய்தித்தாள்களில் வெற்றிடங்களின் பகுப்பாய்வு**

திணைக்களத்தின் மக்கள் வேலைவாய்ப்பு சேவையால ஆகஸ்ட் மாதத்திலிருந்து; சேகரிக்கப்பட்ட அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு சேவை நிலையங்களுக்கு வேலை பொருத்தத்திற்காக விநியோகிக்கப்பட்ட வெற்றிடங்கள் அங்கீகரிக்கப்பட்ட நிலைபேறான முறையின்படி வகைப்படுத்தப்பட்டன. இந்தத் தகவல் பகுப்பாய்வு செய்யப்பட்டு, தொழில் சந்தைப் போக்குகள், அதாவது தேவைப் போக்குகள் பற்றிய தகவல்களைத் தொகுத்து அறிக்கையிட திட்டமிடப்பட்டது. அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.

· மக்கள் வேலைவாய்ப்பு சேவைகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் வினைத்திறனாக்குவதற்கும் வேலை பொருத்தம் குறித்த தகவல்களைச் சேகரித்தல்.

மனிதவலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்தின் மக்கள் வேலைவாய்ப்பு சேவை நிலையத்தால் வேலை வழங்குநர்கள் மற்றும் வேலை தேடுபவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை அதிகபட்ச வினைத்திறனுடன் வழங்குவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்க வேண்டி திணைக்கள தொழில் சந்தை தகவல் மற்றும் ஆராய்ச்சி அலகு மூலம் எங்கள் நிறுவனத்துக்கு பெறப்பட்ட வெற்றிடங்கள், வேலை தேடுபவர்கள் விரும்பும் வேலைகள் மற்றும் அது தொடர்பாக அவர்களின் மனப்பாங்கு குறித்து ஒரு ஆய்வை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.3.4. பிற விசேட திட்டங்கள்

· க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு வேலை உலகுக்கு தேர்ச்சித்திறன்களுடன் நுழைவதற்கு செயன்முறை அனுபவத்தை வழங்குதல்.

இலங்கைப் பாடசாலை கல்வி முறைமையில், உயர்தரப் படிப்பை முடித்த பின்னர், மிகச் சிறிய சதவீத மாணவர்கள் மட்டுமே அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்க தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும், 120,000 பிள்ளைகள் எந்தவொரு திறன் விருத்தியும் இல்லாமல் வேலை உலகில் நுழைகிறார்கள். குறிப்பாக, பரீட்சையில் தோல்வியடைந்ததை அடிப்படையாகக் கொண்டு தொழிற்கல்வியைத் தொடர்வது குறித்து முடிவு செய்யக்கூடாது. இருப்பினும், பாடசாலைக் கல்வியின் போது திறன்களுடன் தொழில் உலகில் சேருவதன் பிரதானத்துவம் தெளிவுபடுத்தப்பட்டால், பாடசாலைக் கல்விக்கு பிறகு உயர்கல்விக்குத் தகுதி பெறாத மாணவர்கள் ஒரு தொழிற்கல்விக் கற்கைநெறியை தெரிவு செய்ய ஊக்குவிக்கப்படுவார்கள்.

| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 1,586,211,217 | 1,398,857,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 343,505,548 | 392,874,198 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 51,224,516 | 49,933,627 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | 1,980,941,281 | 1,841,664,825 | |
| - | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ) | | 1,980,941,281 | 1,841,664,825 | |
| | திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ) | | 3,732,365 | 3,403,513 | |
| | தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ) | | 1,977,208,916 | 1,838,261,313 | |
| | கழி : செலவினம் | | | | |
| | மீண்டுவரும் செலவினம் | | | | |
| 1,247,000,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 1,311,233,480 | 1,173,168,363 | ஏசீஏ-2(ii) |
| 338,700,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 262,835,499 | 233,726,563 | ஏசீஏ-2(ii) |
| 103,050,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 92,408,502 | 87,151,535 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| 250,000 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | 21,020 | 1,243 | ஏசீஏ-2(ii) |
| 1,689,000,000 | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ) | | 1,666,498,502 | 1,494,047,704 | |
| | மூலதன செலவினம் | | | | |
| 18,700,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 9,319,407 | 15,197,606 | ஏசீஏ-2(ii) |
| 10,900,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 7,985,143 | 3,401,810 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 5,700,000 | திறன் விருத்தி | 14 | 898,034 | 1,673,371 | ஏசீஏ-2(ii) |
| 289,700,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 209,072,219 | 337,759,987 | ஏசீஏ-2(ii) |
| 325,000,000 | மொத்த மூலதனம் செலவினம் (எ) | | 227,274,802 | 358,032,774 | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 346,525,067 | 401,712,784 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 55,862,138 | 48,469,040 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | - | - | |
| | மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ) | | 402,387,205 | 450,181,824 | |
| | மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ) | | 2,296,160,508 | 2,302,262,302 | |
| - | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ) | | (318,951,593) | (464,000,990) | |
| | பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி | | (319,315,325) | (464,000,990) | ஏசீஏ-7 |
| | டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி | | 363,732 | - | ஏசீஏ-3 |
| | | | 363,732 | - | |

3.2. 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

**2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2024 ரூபா | 2023 ரூபா |
|---|---|---|---|
| <u>நிதி சொத்துக்கள் அற்றது</u> | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 894,432,663 | 926,280,143 |
| <u>நிதி சொத்துக்கள்</u> | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 126,835,229 | 122,197,608 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | 363,732 | - |
| மொத்த சொத்துக்கள் | | 1,021,631,624 | 1,048,477,751 |
| <u>தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு</u> | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 121,437,068 | 113,779,927 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 894,432,663 | 926,280,143 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | - | - |
| <u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u> | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 5,398,161 | 8,417,681 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | 363,732 | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 1,021,631,624 | 1,048,477,751 |

பக்க இலக்கம் 8 முதல் 46 வரை ஏசீஏ 2 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 47 முதல் 52 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| ………………… | ……………… | ……………………………… |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | |
| திகதி : .02.2025 | திகதி : .02.2025 | திகதி : .02.2025 |

## 2.3. 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

எசீஎ- சீ

### 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | **2024 ரூபா** | **2023 ரூபா** |
| **<u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | 22,248,628 |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 77,651,613 | 71,802,809 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 1,586,211,217 | 1,398,857,000 |
| முற்பணங்களை அறவிடல் | 52,044,150 | 47,037,138 |
| வைப்புக்களின் பெறுகை | 343,505,548 | 392,874,198 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **2,059,412,527** | **1,932,819,773** |
| **<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u>** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 1,499,319,227 | 1,352,377,314 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 92,408,502 | 87,151,535 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 360,645 | 651,227 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 3,732,365 | 3,403,513 |
| முற்பணக் கொடுப்பனவு | 49,902,878 | 43,047,540 |
| வைப்புக் கொடுப்பனவு | 346,525,067 | 401,712,784 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **1,992,248,684** | **1,888,343,913** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **67,163,843** | **44,475,860** |
| **<u>முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | 8,220,000 |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **-** | **8,220,000** |
| **<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u>** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 66,800,111 | 52,695,860 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **66,800,111** | **52,695,860** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(66,800,111)** | **(44,475,860)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **363,732** | **0.00** |
| **<u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **-** | **-** |
| ***<u>கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:</u>*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **-** | **-** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | **-** | **-** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ)** | **-** | **-** |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி | - | - |

## 3.4. நிதிக் கூற்றுக்களின் குறிப்புகள்

1) ***தயாரிப்பின் நோக்கம்***

அரசு நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 மற்றும் 16.12.2024 திகதியிட்ட பொதுக் கணக்கு வழிகாட்டுதல்கள் இலக்கம் 06/2024 ஆகியவற்றின் விதிகளின்படி நிதிநிலை கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**2) அறிக்கையிடல் காலம்**

இந்த நிதிநிலை கூற்று அறிக்கையிடல் காலம் ஜனவரி 1, 2024 முதல் டிசம்பர் 31, 2024 வரை ஆகும்.

**3) அளவீட்டு அடிப்படை**

நிதி கூற்றுக்கள் சில சொத்துக்களின் மீள்மதிப்பீட்டால் மாற்றியமைக்கப்பட்ட வரலாற்று செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், வேறுவிதமாக குறிப்பிடப்பட்டாலன்றி மாற்றியமைக் கப்பட்ட பண அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்களின் புள்ளிவிபரங்கள் இலங்கை ரூபாவில் அருகிலுள்ள ரூபாவுக்கு முழுமைப் படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன.

**4) வருமான இனங்காணல்**

பரிமாற்றம் மற்றும் பரிமாற்றம் அல்லாத வருமான ஆகியவை, அவை செலுத்த வேண்டிய காலத்தைப் பொருட்படுத்தாது, பணம் பெறப்பட்ட காலப்பகுதியில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன

**5) சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை** அடையாளம் கண்டு **அளவிடுதல்**

சொத்துக்களானவை, சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்கு உள்வரும் மற்றும் சொத்து நம்பத்தகுந்த வகையில் அளவிடப்படும்போது சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களாக அங்கீகரிக்கப்படுகின்றன.

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் செலவில் அங்கீகரிக்கப்பட்டு, செலவு மாதிரி பொருந்தாத இடங்களில் மீள்மதிப்பீடு மதிப்பு பயன்படுத்தப்படுகின்றது

**6) சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த ஒதுக்கக் கணக்கு சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய கணக்காகும்.

**7) பணமும் மற்றும் பணத்திற்கு சமமானவையும்**

பணமும் மற்றும் பணத்திற்கு சமமானவையும், 2024 டிசெம்பர் 31 இலுள்ளவறான கையிலுள்ள உள்நாட்டு பணத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளக்குகின்றது..

*குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்கள் குறித்த அறிக்கையிடல் நிறுவனத்திற்கு உரியதாகவுள்ள சந்தர்ப்பங்களில், அந்த வடிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்கள் செய்யப்படலாம். என்பதுடன், அந்த குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு தேவையான வெளிப்படுத்தல் "அறிக்கையிடல் அடிப்படையில்" உள்ளடக்கப்படலாம்.

*அறிக்கையிடல் நிறுவனத்துடன் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கைகள் மாத்திரமே அறிக்கையிடலின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

## 3.5 வருமான சேகரிப்பில் செயலாற்றுகை

**அட்டவணை 3.1 - வருமான சேகரிப்பில் செயலாற்றுகை**

ரூபா 000

| வருமான குறியீடு | வருமான குறியீட்டின் விளக்கம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | மூல மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீடு % ஆக |
| அறிக்கையில்லை | | | | | |

## 3.6 ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவதில் செயலாற்றுகை

**அட்டவணை** 3.2 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதில் செயலாற்றுகை ரூ. ,000

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கீட்டுத் தொகை | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு இறுதி ஒதுக்கீட்டுத் தொகையின் மூ ஆக |
|---|---|---|---|---|
| | மூல ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழு | 1,689,000,000/- | 1,779,824,000/- | 1,666,498,502/- | 94 |
| மூலதனம் | 325,000,000/- | 362,400,000/- | 227,274,802/- | 63 |

## 3.7 ஒ.விதி 208 இன் நியதிகளின்படி ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதிசார் ஒதுக்கீடுகள்

**அட்டவணை 3.3 -** ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள்

| தொ.இல. | ஒதுக்கீடுகள் பெறப்பட்ட அமைச்சுக்கள் / திணைக்களங்கள் | ஒதுக்கீட்டின் குறிக்கோள் | ஒதுக்கீடு | | உண்மையான செலவீனம் | இறுதி ஒதுக்கீடு % பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | மூல ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| 01 | பொது சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சு | புதிய பட்டதாரி பயிற்சியாளர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான | | - | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 02 | ஓய்வூதியத் திணைக்களம் | ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கு செலுத்த வேண்டிய பணத்தைத் தீர்ப்பனவு செய்தல் | | - | - | - |

## 3.8. நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

**அட்டவணை** 3.4 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை ரூ. ,000

| **ஆதனக் குறியீடு** | **குறியீட்டு விளக்கம்** | **பொருட் கணக்கெடுப்புச் சபை அறிக்கையின் படி** 2020.12.31 **இலுள்ளவாறு மீதி** | **நிதி நிலமை பற்றிய அறிக்கையின் படி** 2022.12.31 **இலுள்ளவாறு மீதி** | **எதிர் காலத்தில் கணக்கிடப்படும்** | **முன்னேற்றம்** %**இல் அறிக்கையிடப்படுதல்** |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 31,823,502/- | 31,823,502/- | - | 100% |
| 9152 | இயந்திரங்கள் | 862,074,161/- | 862,074,161/- | - | 100% |
| 9153 | காணிகள் | - | - | - | - |
| 9154 | தொட்டுணரமுடியாத ஆதனங்கள் பௌதீக ஆதனங்கள் | 535,000/- | 535,000/- | - | 100% |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | நடந்துகொண்டிருக் கின்ற வேலை | - | - | - | - |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் | - | - | - | - |

# 3.9. தலைமை கணக்காய்வாளர் அறிக்கை

LSW/B/MOL/SR/01/2024 2024 **ஜூன்** 24

பிரதம கணக்கீட்டு அலுவலர்
தொழில் மற்றும் வேளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சு

**தலைப்பு 193 - தொழில் மற்றும்; வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 193 - தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் மற்றும்; வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சுக்கு முன்வைக்கப்பப்பட்ட இந்த நிதிக்கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயம் தெரிவித்தல் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றன. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் முன்வைக்க வேண்டிய கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 2024 திசெம்பர் 31 அன்று நிறைவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுகளி;ல், நிதி நிலைமை, நிதிசார் செயலாற்றுகை மற்றும் நிதிப்பாய்ச்சல், நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுவதற்கு இணைவாக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 விடய கவனயீர்ப்பு - நிதிநிலை கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படை**

இந்த நிதிநிலை கூற்று தயாரிப்பு செய்தல் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுகளுக்கு உரித்தான குறிப்பு 1 குறித்து கவனத்தை ஈர்க்கின்றோம். நிதிக்கூற்றுகள் அரசாங்க நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திருத்தப்பட்ட, டிசம்பர் 16, 2024 தேதியிட்ட அரசாங்க கணக்கியல் சுற்றறிக்கை இலக்கம் 6ஃ2024 இன்படி தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, பொதுத் திறைசேரி மற்றும் அமைச்சரவையின் நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த நிதிநிலை அறிக்கைகள் பிற நோக்கங்களுக்காகப் பொருந்தாமல் போகலாம். எனது அறிக்கை அமைச்சு, பொது திறைசேரி மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மட்டுமே இலக்கானது. இந்த விடயம் தொடர்பாக எனது அபிப்பிராயம் கணக்காய்வு விடயத்துக்கு பொருந்தாது.

**1.4 நிதிநிலை கூற்றுகள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு அதிகாரி மற்றும் கணக்கீட்டு அதிகாரியின் பொறுப்பு**

அரசாங்க நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 மற்றும் பிப்ரவரி 21, 2025 அன்று திருத்தப்பட்ட டிசம்பர் 16, 2024 தேதியிட்ட அரசாங்க கணக்குகள் வழிகாட்டல் கையேடு இலக்கம் 6/2024 ஆகியவற்றின் படி, அனைத்து பொருண்மை தொடர்பில் நியாயமான நிலவரத்தை பிரதிபலிக்குமாறு நிதிக்கூற்றுகள் ஏற்பாடுகளுக்கமைய தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**1.5 நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வா¡ரின் பொறுப்பு**

ஒட்டு தமாத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகை காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கைகளிலிருந்து விடுபட்டுள்ளதாக நியாயமான உறுதிப்படுத்ததலான்றைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக உள்ள போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளதென்பதற்கான உறுதிப்படுத்தலல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக் கூடியதாக இருப்பதுடன் அதன் அளவு சார்தன்மையானது, இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியிருக்கும்.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புகள் மற்றும் உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணி செயற்பட்டிருக்கின்றேன். அத்துடன்; என்னால்,

· வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றைப் பெற்றுக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்ககளின் ஆபத்தினை இனங்காண்பதற்காகவும் மதிப்பிடுவதற்காகவும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

· உள்ளக கட்டுப்பாட்டின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படாத போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்டது.

· வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் பரிவரத்;தனைகள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மதிப்பாய்வு செய்யப்பட்டது.

• நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியிருப்பதும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணமும் மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரியப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன என்பதும்,

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 செலவின முகாமைத்துவம்**

(அ) செலவினத் தலைப்புகள் 7 இற்கு வழங்கப்பட்டிருந்த ரூ.21,650,000 ஒதுக்கீட்டில் மதிப்பாய்வு வருடத்தில் எந்தச் செலவும் செய்யப்படாததால் நூற்றுக்கு நூறு ஒதுக்கீட்டு சேமிப்பு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 14 செலவினத் தலைப்புகளுக்குரியதாக வழங்கப்பட்டிருந்த 75,898,000 ரூபா ஒதுக்கீட்டில் மீளாய்வாண்டின் இறுதியாகும் போது, 32,733,311 ரூபா மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த செலவுத்தலைப்பகளில் மிகுதியானது நூற்றுக்கு 50 முதல் நூற்றுக்கு 99 வரையான வீச்சில் இருந்தது.

**3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்காமை**

| | **சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|---|
| (m) | (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை XXIV அத்தியாய 4.5 மற்றும் 4.6 உட்பிரிவு<br><br>XLVII அத்தியாhயம் | (i) தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் பதவியை விட்டுச்சென்ற அதிகாரிகள் இருவரிடம் அறவிட வேண்டிய ரூ 56,501 எனும் கடன் தொகை மற்றும் தொழிலாளர் பிரிவில் பதவியை விட்டுச்சென்ற அதிகாரி ஒருவரிடம் அறவிட லேண்டிய 114,575 எனும் கடன் தொகை மீளாய்வு ஆண்டின் இறுதியாகும் போதும் அறவிடல் செய்யப்படாமலிருந்தது.<br>(ii) தொழிலாளர் பிரிவில் சேவையாற்றியிருந்த போது மரணமடைந்த அலுவலரிடம் அறவிட வேண்டிய 230,300 கடன் தொகை அறவிடல் செய்யப்படாமல் இருந்தது.<br>ஜயகமு ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போது உரிய நிகழ்வு முகாமையாளருடன் ஏற்படுத்திக்கொண்டிருந்த உடன்படிக்கையில் 3.1.1 (IV) நிபந்தனையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளரின் செலவில் இசைக் கச்சேரி நடத்த வேண்டும் என்பதற்காக அதில் (ஓ) நிபந்தனைக்கு அமைய நிகழ்வில் பங்குபற்றிய அனைத்து அலுவலர்களுக்கும் இராப்போசன விருந்தை நடத்த வெண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்ததோடு, இந்த வினைப்பாடு தாபனக்கோவை ஐஐ ஆம் தொகுதியில் அலுவலர்களின் நடத்தை மற்றும் ஒழுக்கம் தொடர்பான கட்டளைகளுக்கு முரணாக செயற்பட ஊக்குவிப்பு வழங்கியதாக அவதானிக்கப்படுகின்றது. |
| ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாண ஒழுங்குவிதிகள்<br>(i) நி.ஒ.104 (1) | எந்தவொரு இழப்பு அல்லது சேதத்திற்கான அளவு மற்றும் காரணங்களைக் கண்டறியவும், பொறுப்பானவர்களைக் கண்டறியவும் விசாரணைகள் |

| | | |
|---|---|---|
| | | தொடங்கப்பட வேண்டும் என்றாலும், மே 20, 2023 அன்று தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் விபத்தில் சிக்கிய ஒரு வாகனத்துக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பாக அறிய கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டுள்ளது, ஆனால் எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை |
| | (ii) நி.ஒ 110<br>( | சேதம் மற்றும் இழப்புப் பதிவேடு பராமரிக்கப்பட்டாலும், தொழில் பிரிவில் உள்ள சேதம் மற்றும் இழப்புப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை. |
| (,) | இ) 2016 டிசம்பர் 16 ஆம் திகதியிட்ட இலக்கம் 30ஃ2016 பொது நிர்வாக சுற்றறிக்கை<br>(i) பிரிவு 3.1<br><br>(ii) பிரிவு 06 | அமைச்சுக்கு சொந்தமான 17 வாகனங்களுக்கு எரிபொருள் தகன சோதனைகள் நடத்தப்படவில்லை.<br><br>அனைத்து உத்தியோகபூர்வ வாகனங்களுக்கும் நியமிக்கப்பட்ட ஓட்டுநர்கள், மாதத்தில் கடமைக்காக நிகழ்த்தப்பட்ட போக்குவரத்து சேவைகளின் பதிவுகளைப் பராமரிக்கவில்லை. |

**3.3 முறைசாரா கொடுக்கல் வாங்கல் பரிவர்த்தனைகள்**

(அ) ஜெயகமு ஸ்ரீலங்கா (Glocal fair) என்ற பெயரில் நாடு முழுவதும் 24 மாவட்டங்களை உள்ளடக்கிய தொடர்ச்சியான நடமாடும் சேவைகளை நடத்துவதற்கு ஒரு நிகழ்வு முகாமையாளரை (Event Manager) தேர்ந்தெடுப்பதற்கான பெறுகை செயல்முறையின் போது, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பெறுகை குழு நிறுவனப் பதிவு தொடர்பான தகவல்களை நிறுவனப் பதிவாளர் துறையிடமிருந்து பெற்றது, ஆனால் அந்தத் தகவலைக் கருத்தில் கொள்ளாமல், ஒரே பணிப்பாளர் சபையால் ஒரு நிறுவன ரீதியாகக் கட்டுப்படுத்தப்படும் வெவ்வேறு பெயர்களைக் கொண்ட இரண்டு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

(i) அதன்படி, அமைச்சு பெறுகை குழுவினால் ஒரு நிகழ்வு முகாமையாளரை தேர்ந்தெடுக்கும்போது, ஒரே கட்டுப்பாட்டுடன் கூடிய நிறுவனம் இரண்டு நிறுவனப் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், இரண்டு நிகழ்வு முகாமையாளர்களை தேர்ந்தெடுக்கும் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளது.

(ii) மேற்கூறிய நிகழ்ச்சிகள்; சுயநிதி அடிப்படையில் செயல்படுத்தப்படும் என்று டிசம்பர் 05, 2023 அன்று முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், செலவு மதிப்பீடு எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. ஜனவரி 08, 2024 அன்று இரு நிறுவனங்களுடனும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரிவு 32(ix) இன் படி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு 20 மையங்களை பணம் செலுத்தும் அடிப்படையில் வழங்க வேண்டும் என்றும், அதற்காக நிறுவனங்களிடமிருந்து பணம் பெற வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தும் அமைச்சினால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் செஸ் வரி வருவாயில் இருந்து அதற்கான பணத்தை செலுத்துமாறு எழுத்துப்பூர்வமாக பணியகத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதில் "புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஆற்றிய பெரும் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் புலம்பெயர்ந்தோர் நலத் திட்டத்தை நடத்துவதற்காக" தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் 2024 ஜூன் 26 அன்று சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தின்படி தெற்கு, வடக்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் மூன்று (03) நிகழ்ச்சிகளை நடத்த அனுமதி அளிக்கப்பட்டது.

(i) அமைச்சரவை முடிவுக்கு மாறாக, வட மாகாணத்தில் நிகழ்வை ஏற்பாடு செய்வதற்குப் பதிலாக, ஜூலை 21, 2024 அன்று குருநாகலில் (வடமேற்கு மாகாணம்) ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

(ii) விகமனிக ஹரசர திட்டத்தை செயல்படுத்துவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் 3.1 இன் படி, ஒரு தனியார் நிறுவனத்திற்கு நேரடி பெறுகை வழங்கப்பட்டிருந்தது என்பதோடு, நிறுவனம் சமர்ப்பித்த ரூ. 19,592,000 மதிப்பீட்டில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் கோரப்பட்ட 9 உருப்படிகளுக்கு ரூ. 1,680,000 விலை குறைப்பு செய்யப்பட்டு ஒப்பந்தம் எட்டப்பட்டது. அதன்படி, விலைகளைச் சமர்ப்பிப்பதில் எந்த ஒழுங்கும் அவதானிக்கப்படவில்லை.

(iii) விகமனிக ஹரசர திட்டத்தை செயல்படுத்துவதற்காக நேரடி பெறுகை மூலம் பெற்ற தனியார் நிறுவனம் சமர்ப்பித்த மதிப்பிடப்பட்ட விலையின்படி, அமைச்சினால் நிறுவனத்துக்கு ரூ 62,756, 540 நிதி செலுத்தப்பட்டதோடு அந்த நிறுவனம் விலைமனுக்களை கோரி மற்ற நிறுவனங்களால் குறைந்த விலையில் சேவைகளைச் செய்து, ரூ. 56,463,140 செலுத்தியதால், மேற்கூறிய செலவுகளில் ரூ. 6,293,400 மிகைப்படுத்தப்பட்ட மதிப்பீடு இருப்பது கவனிக்கப்பட்டது.

(iv) இந்த ஹரசரா திட்டத்திற்காக வைபவ நிகழ்ச்சிகளுக்கு ரூ.63 செலவிடப்பட்டது, ஆனால் வைபவங்களின் போது வழங்கப்பட்ட உணவைத் தவிர, எதிர்கால சேமநலனுக்காக சுயதொழில் அல்லது பிற நன்மை சலுகைகள் எதுவும் பெறப்படவில்லை. வந்த தொழிலாளர்களுக்கு கௌரவம் செலுத்தும் வகையில், ஜனாதிபதி, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சரின் மூன்று வாழ்த்துக்களுடன் கூடிய மூன்று கோப்புகள் வழங்கப்பட்டதோடு, அதற்கான செலவு ரூ.1,935,000. ஆகும். சம்பந்தப்பட்ட இடம்பெயர் தொழிலாளர்களை வைபவத்துக்கு அழைத்து வருவதற்காக 226 பேருந்துகளுக்கு இலங்கை போககுவரத்து சபைக்கு வேலைவாய்ப்பு பணியகத்தால் ரூ.8,041,476 செலவு செய்யப்பட்டது. அதன்படி, தொழிலாளர்களின் நன்மைகளை விட கூடுதல் செலவுகள் அதிகமாக செய்யப்பட்டன.

**4. செயல்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

**4.1.1 எதிர்பார்த்த அளவிலான நிறைவு நிலையை அடையத் தவறுதல்**

(அ) பின்வரும் நோக்கங்களின் எதிர்ப்பார்த்த படிநிலையை அமைச்சால் அடைய முடியவில்லை.

(i) அரசாங்கத்தின் தேசியக் கொள்கையின் அடிப்படையில் தாபிக்கப்பட்ட தொழிலாளர் விடயதானத்துக்கு தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல், நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல். மேற்பார்வை மற்றும் பின்தொடர்தல் வழங்கப்பட்டிருந்தாலும்,

தற்போதைய தேவைகளுக்கு ஏற்றவாறு ஒருங்கிணைந்த தொழிலாளர் சட்ட சீர்திருத்தம் (Combined Labour Law Reforms) முடிக்கப்படவில்லை என்பதும், 2024 ஆம் ஆண்டில் 2 புதிய சட்டத் திருத்தங்கள் மட்டுமே செய்யப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டது.

(ii) அமைச்சின் நோக்கெல்லைக்கு தேவையான பொதுமக்கள் சேவைகளை வினைத்திறனாகவும் பொது மக்களுக்கு உகந்த முறையிலும் வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டாலும், தொழில் திணைக்களத்தின் சேவைகள் சேமலாப வைப்பு நிதியத்திலிருந்து நன்மை சலுகைகளை வழங்குவது தொடர்பான முடிவுகளை செயல்படுத்துவது நூற்றுக்கு 50-74 சதவீத மட்டத்தில்; உள்ளது மற்றும் தொழில் திணைக்களத்தின் முறைப்பாட்டு முகாமைத்துவ அமைப்பு சரியான முறையில் செயற்பட்டிருக்கவில்லை.

(iii) தொழிற்சங்கங்களைப் பதிவு செய்வதற்கும், பொது மற்றும் தனியார் துறைகளில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களின் செயல்பாடுகளையும் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதற்கும் ஒரு நேர்முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தாலும், தொழில் திணைக்களத்தால் செயல்படுத்தப்பட்ட 1935 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க தொழிற்சங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் செயல்பாடுகளைப் புதுப்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாத சந்தர்ப்பங்களில் அவற்றின் பதிவை ரத்து செய்து பொதுமக்களுக்குத் தெரிவிப்பதற்கும் ஒரு முறைமை வகுக்கப்பட்டிருக்கவில்லை.

(iஎ) தேசிய மனிதவள பாதுகாப்பு கொள்கையை செயல்படுத்த அமைச்சுக்கு பணியை வழங்கியிருந்தாலும் 2025 வருட அளவிலும் தேசிய மனிதவள பாதுகாப்பு கொள்கையை உருவாக்கவில்லை.

(எ) வீண்விரயம் மற்றும்; ஊழலை தவிர்க்க அமைச்சகத்தின் பங்கு நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்காக நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைகள் மற்றும் நடைமுறைகளையும் சீர்திருத்துவது அமைச்சின் முக்கிய பணியாகக் கூறப்பட்டாலும், நட்டஈட்டு கட்டளை சட்டத்தின் ஒழுங்குவிதிகளின்படி பணியாளர்களுக்கு நட்டஈடு செலுத்தும் செயல்முறையைப் பின்பற்றுவதில் நீண்ட காலம்; எடுத்துக்கொள்வதாலும், நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தின் கோப்புகளை கணினிமயமாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாததாலும் சரியான நேரத்தில் தகவல்களைப் பெறுவதில் தாமதங்கள் காணப்படுகின்றன.

(எi) தேசிய உற்பத்தித்திறன் செயலகத்துடன் இணைக்கப்பட்ட அபிவிருத்தி அதிகாரிகளால் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் முன்னேற்றம் தொடர்பாக மேல் மாகாணத்தில் நடத்தப்பட்ட மாதிரி ஆய்வில், சிறு அளவிலான நிறுவனங்களை உற்பத்தித்திறன் கருத்துக்கள் மூலம் வலுப்;படுத்துதல், பொதுத்துறை செயல்முறைகளை மேம்படுத்துதல், 5s சான்றிதழ் திட்டங்களை நடத்துதல, உற்பத்தி திறன் மேம்பாடு நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றின் நோக்கங்கள் போதுமான அளவு அடையப்பட இயலாதிருந்தமை.

(ஆ) தொழில் சட்ட நடைமுறைகளின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிப்பது அமைச்சின் நோக்கமாக இருந்தாலும், தொழில் திணைக்களத்தால் துறையால் செயல்படுத்தப்பட்ட 20 கட்டளைச் சட்டங்களில், 5 கட்டளைச் சட்டங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன, மீதமுள்ள கட்டளைச் சட்டங்கள் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப திருத்தப்படுவது மந்த கதியில் இருக்கின்றது.

#### 4.1.2 சொத்து முகாமைத்துவம்

2023 ஆம் ஆண்டு மே 20 ஆம் திகதி தெற்கு nதிவேக நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளான கெப் ரக வாகனம் இரண்டு வருட காலம் கடந்து இருந்தாலும் பழுதுபார்ப்பு நடவடிக்கை மற்றும் சோதனை ஆய்வு நடவடிக்கை நிறைவுறுத்தப்படாமல் இருப்பதோடு விபத்து நடந்த காரணத்தால் தெற்கு தெற்கு nதிவேக நெடுஞ்சாலைக்கு ஏற்பட்ட சேதச் செலவு ரூ. 260,716 அமைச்சினால் வகிக்கப்பட்டுள்ளது.

#### 4.1.3 பணமற்ற கொடுக்கல் வாங்கல் பரிவர்த்தனைகள்

உற்பத்தித்திறன் செயலக அலுவலகத்தால் 2015 ஆம் ஆண்டில் உற்பத்தித்திறன் செயலாளரின் அலுவலகத்தால் ரூ. 1,465,200 ஆரம்ப செலவில் பெறுகை செய்யப்பட்ட உடிசநநணந கணினி

அமைப்பை பேணுவதற்கு 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள்; ரூ. 5,434,095 செலவிடப்பட்டிருந்தாலும், கல்வி நிகழ்ச்சித் திட்டம் இது ஆரம்பத்தில் இருப்பினும், கணினி அமைப்பு கல்வித் திட்ட முகாமைத்துவம் மற்றும் நிகழ்வு திட்டமிடலுக்குப் பயன்படுத்தப்படாததால் செலவிடப்பட்ட பணம் பொருளாதார ரீதியாக விளைதிறனுள்ளதாக இல்லை.

**5. மனித வள முகாமைத்துவம்**

(அ) மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள உற்பத்தித்திறன் மேம்பாட்டு அலுவலர்கள் 5 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே அலுவலகத்தில் பணியாற்றி வருவதும், அலுவலர்களின் இடமாற்றம் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படாததும், இடமாற்றத்திற்குப் பிறகு அலுவலர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகள் கிடைப்பதைக் கண்டறிந்தது.

(ஆ) அமைச்சுடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களான தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் இரண்டினதும் பிரதான நிறைவேற்றுத்தர பதவியான பணிப்பாளர நாயக பதவிகளில் செயல நிறைவேற்று அடிப்படையிலும் ஒப்பந்த அடிப்படையிலும் உள்ள அதிகாரிகளை நியமித்திருந்தமை.

எச்.எம்.டி சொய்சா,

சிரேட்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பதிலாக

# செயலாற்றுகை குறிகாட்டிகள்

**அட்டவணை** 4.1 அமைச்சு செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)

தொழில் அமைச்சு

| | குறிப்பிட்ட குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றின் சதவீதமாக (%) உண்மையான விளைவு | | |
|---|---|---|---|---|
| | | 100% - 90% | | 100% - 90% |
| 1 | தொழில் திணைக்களம் தொடர்பான புதிதாக இயற்றப்பட்ட/திருத்தப்பட்ட சட்டங்களின் எண்ணிக்கை | 2 | - | 3 |
| 2 | தேசிய தொழில் அமைப்புக்கு அறிக்கைகளைத் தயாரித்தல்- | | | |
| | i. அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் தாபன மாநாடுகளுக்கான ஆண்டு அறிக்கைகளின் எண்ணிக்கை | √ | | |
| | ii. சமவாயங்களுக்கு அங்கீகரிக்கப்படாத அறிக்கைகளின் எண்ணிக்கை | √ | | |
| | iii. Article 24 இன் கீழ் தொகுக்கப்பட வேண்டிய அறிக்கைகள் | √ | | |
| 3 | புதிய மாநாடுகள்<br>i. Working Fishing Convention -C 188 | √ | | |
| 4 | பிற சர்வதேச நிறுவனங்கள், அமைச்சுகள்மற்றும் பல்வேறு பங்குதாரர்களுக்காக தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள். | | | |
| . | i. Human Trafficking in Persons | √ | | |
| | ii. US Child Report | √ | | |
| | iii. Central Bank | | | √ |
| | vi. Convention on the Elimination of Discrimination against Women | √ | | |
| 5 | தேசிய வழிகாட்டுதல் குழு கூட்டங்கள் (NSCE) | | √ | |
| 7 | DWCP (Decent Work Country Programm) Task Force | √ | | |
| 8 | பதிலளிக்கப்பட்ட கணக்காய்வு வினவல்களின் எண்ணிக்கை | √ | | |
| 9 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களின் எண்ணிக்கை | √ | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | கணக்காய்வு விசாரணைகள் தவிர அறிக்கைகள் | √ | | |
| **தொழில் திணைக்களம்** | | | | |
| 11 | ஊழியர் சேமலாப நிதி அனுகூல பலன்களை 14 நாட்களுக்குள் செலுத்துவதற்கான முடிவு கடிதங்களை அனுப்புதல். | | | √ |
| 12 | 2025 ஆம் ஆண்டுக்குள் இலங்கையை சிறுவர் தொழில்இல்லாத நாடாக மாற்றும் நிலைபேறான இலக்கை மனதில் கொண்டு, 2024 ஆம் ஆண்டில் நிறைவேற்ற வேண்டிய இலக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வது. | √ | | |
| 13 | நிறுவனங்களில் நிறுவப்பட வேண்டிய இருதரப்பு பாதுகாப்புக் குழுக்களின் இலக்கிலிருந்து நிறுவப்பட்ட இருதரப்பு பாதுகாப்புக் குழுக்களின் எண்ணிக்கை | | √ | |
| 14 | இரவுப் பணியில் பெண்களைப் பணியமர்த்துவது தொடர்பான நிபந்தனைகளை மீறுவது தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகளை விசாரித்து தீர்வு காணுதல் | √ | | |
| 15 | சமூக கலந்துரையாடலை ஊக்குவிப்பதற்காக நிறுவன அளவிலான திட்டங்களை நடத்துவதற்கான இலக்கு சதவீதத்தில் நடத்தப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | √ | | |
| **மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்** | | | | |
| 16 | வேலை தேடுபவர்கள் பதிவு | √ | | |
| 17 | வேலை வெற்றிட பதிவு | √ | | |
| 18 | வேலை தேடுபவர்களின் வேலைவாய்ப்பு | | √ | |
| 19 | பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்பட்ட தொழில் வழிகாட்டுதல் திட்டங்களின் எண்ணிக்கை | √ | | |
| 20 | சுயதொழில் மற்றும் ஒரு நிறுவனத்தைத் தொடங்குதல் | | | √ |
| 21 | பயிற்சிக்கான பரிந்துரை | √ | | |
| **தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்** | | | | |
| 22 | பொது மற்றும் தனியார் துறைகளுக்கான பயிற்சி திட்டங்கள் மற்றும் பரீட்சைகளை நடத்துதல் | √ | | |
| **தொழிலாளர் நட்ட ஈட்டு ஆணையாளர் அலுவலகம்** | | | | |
| 23 | முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | √ | | |
| 24 | இரு தரப்பினரின் பரஸ்பர ஒப்புதலின் மூலம் சமாதானத்தை எட்டுவது | | | √ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொடர்பான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | | | | |
| 25 | இறந்த ஊழியர்களின் 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்காகத் தொடங்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | | | √ | |
| 26 | பிள்ளைகள் 18 வயதை எட்டியதால் வெளியிடப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | | √ | | |
| **சிரம வாசனா நிதி** | | | | | |
| 27 | அறிவூட்டல் நிகழ்ச்சிகள் | | √ | | |
| 28 | கல்வி உதவித் திட்டங்கள் சிறப்பு | விசேட | √ | | |
| | | பொது | √ | | |
| 29 | சட்ட உதவி மற்றும் மேல்முறையீட்டு திட்டம் | | | | √ |
| 30 | அபாயகரமான விபத்து உதவித்தொகை திட்டம் | | | | √ |
| 31 | மருத்துவ முகாம்களை நடத்துதல் | | | | √ |

# நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைவதில் செயலாற்றுகை

5.1.தொடர்புடைய அடையாளம் கா ணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| பணி இலக்கு / இலக்கு | | பணி இலக்குகள் | | அடைவுக் குறிகாட்டிகள் | | 2024.01.01 முதல் 2024.12.31 வரை இலக்கு சாதனை குறிகாட்டிகளை அடைவதில் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | அனைத்து வடிவங்களிலும் ஒழித்தல் | 1.1 | அனைத்து மக்களுக்கும் தீவிர வறுமையை ஒழித்தல். தற்போதைய மதிப்பீடுகளின்படி, ஒரு நாளைக்கு $1.25 க்கும் குறைவாக சம்பாதிப்பவர்கள் தீவிர வறுமைப் பிரிவில் வருகிறார்கள்.. | 1.1.1 | பாலினம், வயது, வேலைவாய்ப்பு நிலை மற்றும் புவியியல் இருப்பிடம் (நகர்ப்புறம், கிராமப்புறம்) ஆகியவற்றின் அடிப்படையில் சர்வதேச வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள்தொகையின் விகிதம் | 2. தேயிலை வளர்ப்பு மற்றும் பதப்படுத்தும் தொழில் மற்றும் ரப்பர் வளர்ப்பு மற்றும் மூல ரப்பர் பதப்படுத்தும் தொழிலில் குறைந்தபட்ச தினசரி ஊதியத்தை புதுப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br>3. "Analysis of Reducing the Gap between Minimum Wage and Nominal Wage in Sri Lanka" என்ற ஆய்வு நடத்தப்பட்டது. தேசிய குறைந்தபட்ச ஊதியம் (மாதாந்தம்) குறைந்தபட்சம் இந்த ஆய்வின் பரிந்துரைகள் இது ரூ. 24,120.00 ஆக இருக்க வேண்டும் என்று கூறுகின்றன. |
| 05 | பாலின சமத்துவத்தை அடைந்து அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு வலுவூட்டல் | 5.1 | எல்லா இடங்களிலும் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் முடிவுக்குக் கொண்டுவருதல் | 5.1.1. | பாலினம் தொடர்பாக சமத்துவம் மற்றும் பாகுபாடு காட்டாததை ஊக்குவிக்க, அமல்படுத்த மற்றும் கண்காணிக்க ஒரு சட்ட கட்டமைப்பு உள்ளதா இல்லையா | 4. 08.03.2024 அன்று கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்து தொழில் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின கொண்டாட்ட நிகழ்ச்சி, 07.03.2024 அன்று தொழில் திணைக்களத்தின்; தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. சமூக ஊடகங்கள் மூலம் "பெண்களைப் பாதிக்கும் தொழில் சட்டங்கள்" பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு குறுகிய வீடியோ படைப்புப் போட்டி. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 5.2 | மனித கடத்தல், பாலியல் மற்றும் ஏனைய வகையான சுரண்டல் உள்ளடங்கலாக, பொது மற்றும் தனியார் துறைகளிலுள்ள அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் இல்லா தொழித்தல் | 5.2.1 | கடந்த 12 மாதங்களில் வன்முறையின் வகை மற்றும் வயதின் அடிப்படையில், 15 வயது மேற்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகளில் பௌதிக , பாலியல் அல்லது உளவியல் ரீதியான வன்முறையை அனுபவித்த ප්‍රමාණය | 5. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பெண்களைப் பாதிக்கும் தொழில் சட்டங்கள் குறித்து பல்கலைக்கழக மாணவர்களுக்கான திறந்த கலந்துரையாடல் மன்றமும் நடைபெற்றது.<br>6. இரவு வேலைகளில் பெண்களைப் பணியமர்த்துவதற்கான நிபந்தனைகளை மீறுவது தொடர்பாக பெறப்பட்ட 09 முறைப்பாடுகள் தொடர்பாக இந்த ஆண்டில் விசாரணைகள் நடத்தப்பட்டு முடிக்கப்பட்டன.<br>8.பெண்களைப் பாதிக்கும் சட்டங்கள் குறித்து உழைக்கும் பெண்களுக்குக் அறிவூட்டுவதற்காக 12 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன, இதில் 418 பெண் ஊழியர்கள் அடங்குவர். பெண்களுக்கு வலுவூட்டல் மூலம் சட்ட மீறல்களைத் தடுக்க இந்த அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் உதவும் என்று நம்பப்படுகிறது. |
| | | 5.6. C. | பாலின சமத்துவத்தை மேம்படுத்து வதற்கும், அனைத்து மட்டங்களிலும் அனைத்து பெண்களுக்கும், பெண் பிள்ளை களுக்கு வலுவளிப்பதற்கும் சரியான கொள்கைகள் மற்றும் செயல்படுத்தக் கூடிய சட்டங்களை ஏற்றுக்கொண்டு பலப்படுத்துதல். | 5.C.1 | பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் அதிகாரமளிப்புக்கான பொது நிதியை அங்கீகரித்து ஒதுக்குவதற்கு ஏற்கனவே உள்ள அமைப்புகளைக் கொண்ட நாடுகளின் எண்ணிக்கை. | |
| 8 | அனைவரையும் உள்ளடக்கிய, நிலைபேறான மற்றும் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி மற்றும் அனைவருக்கும் முழுமையான, | 8.5. | 2030 ஆம் ஆண்டளவில் இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து ஆண் களுக்கும், பெண்களுக்கும் ஆக்கத்திறனுள்ள, சீரிய வேலை வாய்ப்புகளை வழங்குதல். | 8.5.1 | தொழில், வயது மற்றும் இயலாமை காரணிகளின் அடிப்படையில் ஆண் மற்றும் பெண் ஊழியர்களின் சராசரி மணிநேர வருமான | தொழிலாளர் சட்டங்களின்படி, தனியார் மற்றும் அரை-பொது நிறுவனங்களில் உள்ள ஊழியர்களின் சராசரி மணிநேர வருமானம், வயது மற்றும் இயலாமை அல்லது பாலினம் போன்ற காரணிகளின் அடிப்படையில் வேறுபடுவதில்லை. . |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | உற்பத்தி மற்றும் சீரிய வேலைவாய்ப்பை ஊக்குவித்தல் | | | 8.5.2 | பாலினம், வயது மற்றும் குறைபாடுகள் உள்ள நபர்களின் அடிப்படையில் வேலையின்மை விகிதம் | |
| | | 8.7 | கட்டாய உழைப்பை ஒழிப்பதற்கும், பெண் அடிமைத்தனம் மற்றும் ஆள் கடத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், சிறுவர் படை வீர்ர் உள்ளடங்கலாக சிறுவர் தொழிலின் மோசமான வடிவங்களைத் தடுப்பதற்கும், 2025 ஆம் ஆண்டிற்குள் அனைத்து வகை யான சிறுவர் தொழிலுக்கும் முடிவு கட்டுவதற்கும் உடனடியாக பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்தல். | 8.7.1. | பாலினம் மற்றும் வயது வாரியாக 5-17 வயதுக்குட்பட்ட சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கை | • ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12 ஆம் தேதி வரும் 'உலக சிறுவர் தொழில்எதிர்ப்பு தினத்துடன்' இணைந்து, தொழில் திணைக்களம் 18.06.2024 அன்று ஒரு நினைவு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. அந்த நேரத்தில், முறையான துறை நிறுவனங்களின் வேலை வழங்குநர்களிடமிருந்து, குறிப்பாக கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் உள்ள கைத்தொழில் பேட்டைகளில் நிறுவப்பட்ட நிறுவனங்களிடமிருந்து, அவர்களின் நிறுவனங்கள் சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்தாது என்று உறுதிமொழிகளைப் பெறுவதற்கான ஒரு திட்டம் தொடங்கப்பட்டது. இதற்கு இணையாக, துறையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஒரு ஞசு குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டது, மேலும் தீவில் உள்ள அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்த மாட்டோம் என்ற உறுதிமொழியைப் பெறுவதற்கான செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | • தனியார் மற்றும் பகுதியளவிலான அரசத்துறை நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் வேலை வழங்குநர்கள் இருவருக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான தொழில் சட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான தொழில் சட்டங்கள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டிய பிற அரசு நிறுவனங்களின் அதிகாரிகளுக்கான அறிவூட்டல்திட்டங்களையும் தொழில் திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்தியது.<br>கள ஆய்வுகளை மேற்கொள்ளும் தொழிலாளர் உத்தியோகத்தர்கள் , முறைசாரா துறையை மையமாகக் கொண்டு, சிறுவர் தொழிலாளர்களைப் பணியமர்த்த மாட்டோம் என்று மற்ற அனைத்துத் துறைகளிலும் உள்ள வேலை வழங்குநர்களிடமிருந்து உறுதிமொழிகளைப் பெறத் தொடங்கினர்.<br>கொழும்பு மாவட்டத்தில் சிறுவர் தொழில்முறையைப் பற்றிய விளக்கத்தைப் பெறுதல், சிறுவர் தொழில்முறையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல், சிறுவர் தொழிலாளர்கள் உள்ள குடும்பங்களின் சமூக-பொருளாதார நிலை குறித்த தரவுகளைச் சேகரித்தல் மற்றும் சிறுவர் தொழில்முறையை ஒழிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஆய்வு செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு 2024 ஆம் ஆண்டு சிறுவர் தொழில்குறித்த ஆய்வு நடத்தப்பட்டது.<br><br>• சிறுவர் தொழில் ஒழிக்கும் மற்றும் பிரசைகள் பொறுப்பை செய்தியை அடிமட்ட மட்டத்திற்கு எடுத்துச் செல்வது இலங்கை பொலிஸின் சமூக காவல் குழுக்கள் மூலம் மிகவும் நடைமுறைக்கு ஏற்றதாக அடையாளம் காணப்பட்டது. அதன்படி, 2024 இல் கொழும்பு மாவட்டத்தையும் 2025 இல் முழு நாட்டையும் உள்ளடக்கிய இந்த தேசியப் பொறுப்பில் ஒத்துழைப்பது தொடர்பான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.<br><br>சிறுவர் தொழில்தொடர்பாக பெறப்பட்ட 101 முறைப்பாடுகள் குறித்து 2024 ஆம் ஆண்டில் விசாரணைகள் நடத்தப்பட்டன. சிறுவர் தொழில்தொடர்பான 02 முறைப்பாடுகள் கண்டறியப்பட்டு, இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.<br>ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12 ஆம் தேதி வரும் 'உலக சிறுவர் தொழில்எதிர்ப்பு தினத்துடன்' இணைந்து, தொழில் திணைக்களம் 18.06.2024 அன்று ஒரு நினைவு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. அந்த நேரத்தில், முறையான துறை நிறுவனங்களின் வேலை வழங்குநர்களிடமிருந்து, குறிப்பாக |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் உள்ள கைத்தொழில் பேட்டைகளில் நிறுவப்பட்ட நிறுவனங்களிடமிருந்து, அவர்களின் நிறுவனங்கள் சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்தாது என்று உறுதிமொழிகளைப் பெறுவதற்கான ஒரு திட்டம் தொடங்கப்பட்டது. இதற்கு இணையாக, துறையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஒரு ஞசு குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டது, மேலும் தீவில் உள்ள அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்த மாட்டோம் என்ற உறுதிமொழியைப் பெறுவதற்கான செயற்பாடுகள் தொடங்கப்பட்டன.<br><br>• தனியார் மற்றும் பகுதியளவிலான அரசத்துறை நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் வேலை வழங்குநர்கள் இருவருக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான தொழில் சட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான தொழில் சட்டங்கள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டிய பிற அரசு நிறுவனங்களின் அதிகாரிகளுக்கான அறிவூட்டல்திட்டங்களையும் தொழில் திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்தியது.<br>கள ஆய்வுகளை மேற்கொள்ளும் தொழிலாளர் உத்தியோகத்தர்கள் , |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | முறைசாரா துறையை மையமாகக் கொண்டு, சிறுவர் தொழிலாளர்களைப் பணியமர்த்த மாட்டோம் என்று மற்ற அனைத்துத் துறைகளிலும் உள்ள வேலை வழங்குநர்களிடமிருந்து உறுதிமொழிகளைப் பெறத் தொடங்கினர்.<br>கொழும்பு மாவட்டத்தில் சிறுவர் தொழில்முறையைப் பற்றிய விளக்கத்தைப் பெறுதல், சிறுவர் தொழில்முறையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல், சிறுவர் தொழிலாளர்கள் உள்ள குடும்பங்களின் சமூக-பொருளாதார நிலை குறித்த தரவுகளைச் சேகரித்தல் மற்றும் சிறுவர் தொழில்முறையை ஒழிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு 2024 ஆம் ஆண்டு சிறுவர் தொழில்குறித்த ஆய்வு நடத்தப்பட்டது.<br><br>• சிறுவர் தொழில் ஒழிக்கும் மற்றும் பிரசைகள் பொறுப்பை செய்தியை அடிமட்ட மட்டத்திற்கு எடுத்துச் செல்வது இலங்கை பொலிஸின் சமூக காவல் குழுக்கள் மூலம் மிகவும் நடைமுறைக்கு ஏற்றதாக அடையாளம் காணப்பட்டது. அதன்படி, 2024 இல் கொழும்பு மாவட்டத்தையும் 2025 இல் முழு நாட்டையும் உள்ளடக்கிய இந்த தேசியப் பொறுப்பில் ஒத்துழைப்பது தொடர்பான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | சிறுவர் தொழில்தொடர்பாக பெறப்பட்ட 101 முறைப்பாடுகள் குறித்து 2024 ஆம் ஆண்டில் விசாரணைகள் நடத்தப்பட்டன. சிறுவர் தொழில்தொடர்பான 02 முறைப்பாடுகள் கண்டறியப்பட்டு, இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
